மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 2 | 15 - 2 - 54 | இதழ் 20

மறைந்த புரட்சித் தலைவர்,

பகுத்தறிவுச் சுடர்,

எம். என். ராய்

உள்நாடு அணா 4 ★ வெளி நாடு அணா 5 ★ மாதமிருமுறை

நகரசபைத் தேர்தலில் அண்ணா

1935-ஆம் ஆண்டு சென்னை நகரசபைக்கு நடந்த உறுப்பினர் தேர்தலில், உறுப்பினர் பதவிக்காக, அறிஞர் அண்ணா அவர்கள் போட்டியிட்டார்கள். பெத்துநாய்க்கன் பேட்டைப் பகுதித் தொகுதிக்கு அவர் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் நின்றார். அறிஞர் அண்ணா அவர்களை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் தோழர் பாலசுப்பிரமணிய முதலியார் என்பவர் நிறுத்தப்பட்டார்.

அறிஞர் அண்ணாவைப் போலவே அவரும் எம். ஏ. பட்டம் பெற்றவர். ஆனால் அவருக்குக் கூட்டங்களில் பேச வராதாம்.

அறிஞர் அண்ணா அவர்கள் கூட்டங்களில் பேசும்போது, "நானும் எம். ஏ. வரை படித்தவன்; என்னை எதிர்த்து நிற்பவரும் எம். ஏ. வரை படித்தவர். நாங்கள் இருவரும் செல்ல விரும்பும் இடம், உங்கள் சார்பாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டிய நகரசபை. நான் உங்கள்முன் பேசுகிறேன். அவரையும் பேசச் சொல்லி நீங்கள் கேளுங்கள். இருவரில் எவரை அனுப்பலாம், அனுப்பினால் பலன் ஏற்படும் என்பதைப் பிறகு தீர்மானித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிடுவாராம்.

காங்கிரஸ் தேர்தல் கூட்டம் நடக்கும்போது பொதுமக்கள் தேர்தலுக்கு நிற்கும் தோழர் பாலசுப்பிரமணிய முதலியாரைப் பேசும்படி வற்புறுத்துவார்களாம். காங்கிரஸ் தொண்டர்களும் அவரைச் சிறிது நேரம் பேசும்படி கெஞ்சுவார்களாம். "நான் தேர்தலில் வேண்டுமானால் நிற்காமல் நின்றுவிடுகிறேன்; ஆனால் பொதுக்கூட்டங்களில் பேசமட்டும் மாட்டேன்" என்று கூறிவிடுவாராம். அவருக்குப் பதிலாகப் பேசுகிறோம் என்று தோழர்கள் டி. செங்கல்வராயன், கோபாலரத்தினம், சத்தியமூர்த்தி ஆகியோர் முன்வந்து பேசுவார்களாம்.

அடுத்து அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது, "நகரசபையில் போய்ப் பேசப்போவது பாலசுப்பிரமணியமா அல்லது செங்கல்வராயனும் கோபாலரத்னமுமா என்பதைப் பொதுமக்களே நீங்கள் தீர்மானியுங்கள்" என்று பதிலிறுப்பாராம்.

தம்மை எதிர்த்து நின்ற தோழர் பாலசுப்பிரமணிய முதலியாரைப் பற்றிப் பேசும்போது, அறிஞர் அண்ணா அவர்கள் "என்னுடைய நண்பர் பாலசுப்பிரமணியம் 'நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என்ற தத்துவத் துறையைப் (Philosophy) பற்றிப் படித்தவர். நான் நெய்யும், தொன்னையும் மக்களுக்குக் கிடைக்கச் செய்வது எப்படி என்று ஆராயும் பொருளாதாரத் துறையைப் (Economics) பற்றிப் படித்தவன். இருவரில் யார் உங்களுக்குப் பயன்படுவோம் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்" என்று குறிப்பிடுவாராம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

15 - 2 - 54 திங்கட்கிழமை

மாசு துடைக்க வாரீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்தொழிக்க, காங்கிரஸ் அரசியலார், சென்ற ஏழாண்டு காலமாக, என்னவென்னமோ முறைகளையெல்லாம் கையாண்டுபார்க்கிறார்கள்.

கழகப் புத்தகங்களைப் பறிமுதல் செய்தல், பத்திரிகைகளுக்குத் தடைவிதித்தல், பத்திரிகை—அச்சகங்களுக்கு ஜாமீன் தொகைகேட்டல், கூட்டங்களுக்குத் தடைவிதித்தல், கூட்டத்தைக் தடியடியால், கண்ணீர்ப்புகையால், துப்பாக்கிக் குண்டுகளால் கலைத்தல், காலிகளையும் கூலிகளையும் கொண்டு இழிமொழி எழுதச் சொல்லுதல்—வசைமொழி பேசச்சொல்லுதல்—கழகக் கட்டிடங்களைக் கொள்ளையடிக்க, கழகத் தோழர்களைத் தாக்க, கழகக் கொடிகளுக்கு நெருப்புவைக்கத் துணை நிற்றல், கழகக் கருத்துக்களைத் தாங்கிய மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலகத்தார் ஆகியோர்க்குத் தொல்லைகள் கொடுத்தல், கழகத் தோழர்களைக் கைது செய்தல், அவர்களைச் சிறைக்கனுப்புதல் போன்ற பலமுறைகளைக் கையாண்டுபார்த்த அரசியலார், இப்பொழுது புது முறை ஒன்றைக் கையாண்டு பார்க்கிறார்கள். அதுதான் கழகத் தோழர்கள்மீது வழக்குகள்பல தொடுத்து, அவர்களை வாட்டிவதைத்து, கழகத்தின் வளத்தைக் கெடுத்து, அவற்றின்மூலம் கழகத்தையே அழித்தொழிக்க முயலுவதாகும். அப்படித் தொடுக்கப்பட்ட வழக்குகளிலே தலைசிறந்து நிற்பன தூத்துக்குடி வழக்கும், கல்லக்குடி வழக்குமாகும்.

"பரீட்சைகள் பலவற்றில் தேர்வந்த கழகம் இந்தப் பரீட்சையிலும் தேரியே தீரும்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் அளித்துள்ள உறுதிமொழி கழகத் தோழர்களனைவர்க்கும் ஊக்கத்தையும், உணர்ச்சியையும் ஊட்டும் என்பதில் ஐயமில்லை.

"கழகத்தோழர்கள் சிறையிலே வாடுவோர்களே என்பதல்ல எனது கவலை; அவர்கள்மீது வீசப்பட்ட இழிச்சொல்லும் பழிச்சொல்லும், மாசும் தூசும் துடைக்கப்படவேண்டும் என்பது தான் எனது கவலை. எனவேதான் வழக்குகளை எதிர்த்து வாதாடுகிறோம்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் நேர்மைவழி நிற்கு நிலைமையை எடுத்துவிளக்கி உள்ளார்கள்.

கழகத்தின் மாசற்ற நிலையை மாநிலத்திற்குக் காட்ட, கழகத்தோழர்களின்மீது ஏற்றப்பட்ட பழிச் சொற்களைத் துடைக்க, வழக்கு மன்றங்களிலே உயர்நீதிமன்றம் வரையில் படிப்படியாக வாதாட, வாக்குவன்மையும் திறமையும் படைத்த வழக்கறிஞர்களைத் துணைக்கழைக்கக் குறைந்த அளவு இருபதினாயிரம் ரூபாய் தேவை என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். கழகத் தோழர்களும், பொது மக்களும் நாம் மகிழும் வண்ணம், ஆட்சியாளர் மருளும் வகையில் நாடெங்கும் பொருளுதவி செய்து வருகிறார்கள். இதுவரையில் கடமையாற்றாத தோழர்கள், மார்ச் திங்கள் 7-ஆம் நாள் திருச்சியில் கூடும் பொதுக்குழு கூட்டத்திற்கு முன்பாகவே, குறிப்பிட்ட தொகை முழுவதும் குவியும் வகையில் பணியாற்றுவார்கள் என்று உறுதிகொள்கிறோம்.

தூத்துக்குடி வழக்கையும், கல்லக்குடி வழக்கையும் முழுமூச்சுடன் நடத்தித் தீருவது என்ற எண்ணத்துடன் எல்லாவித ஏற்பாடுகளையும் செய்துகொண்டு, அரசியலார் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். "கழகத்தின் கணக்கைத் தீர்த்துக்கட்டுவேன். அதனை வரலாற்றில் மட்டுமே இடம்பெறச் செய்வேன்" என்று ஆச்சாரியார் எடுத்துக்கொண்ட சூளுரையின் தொடர் நிகழ்ச்சிகள்தாம், இந்த வழக்குகள் போலும்!

தூத்துக்குடி வழக்கில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 95 தோழர்கள், குற்றக்கூண்டில் நின்று வழக்கின் முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கல்லக்குடி தோழர்களுக்கு முடிவு கூறப்பட்டாகிவிட்டது. காவல் தண்டனை! கடுங்காவல் தண்டனை! அதுவும் கல்லும் மண்ணும் நிறைந்த களியோடு கூடிய காவல் தண்டனை!

சிலருக்கு இரண்டரை ஆண்டுகள்! வேறு சிலருக்கு ஒன்றரை ஆண்டுகள்! அவர்கள் தண்டனை ஏற்கவேண்டிய காலம் முறையே ஒன்றரை ஆண்டும், ஒரு ஆண்டுமாகும்! என்னே கொடுமை! கொடுமை!!

இப்பொழுது வழக்கை நடத்தும் பொறுப்பைத் தலைமைக் கழகம் ஏற்றுக்கொண்டு, மேல் வழக்கு மன்றத்திற்கு நீதி கோரிச் சென்றுள்ளது.

இந்த வழக்குகளை நடத்தும் விதத்தில், அரசாங்கத்தின் மனப்போக்கு எப்படிப்பட்டது என்பதை நன்கு உணர்ந்துகொள்ளலாகும். அரசியல் பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு இரயிலைக் கவிழ்த்தல், கூட்ஸ் வண்டிகளுக்குத் தீ வைத்தல், தந்திக்கம்பிகளை அறுத்தல், அஞ்சல் நிலையங்களை எரித்தல், அதிகாரிகளை அடித்தல் போன்ற மறக்கிளர்ச்சியில் ஈடுபட்ட ஆந்திராத் தோழர்கள் அத்தனைப் பேரையும், அவர்கள்மீது வழக்கை நடத்தாமல், யாதொரு நிபந்தனையும் இன்றி அப்படியே விட்டுவிட முனைந்த சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார், அறக்கிளர்ச்சியில் மட்டுமே ஈடுபட்ட கழகத் தோழர்கள்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை, மீட்சிபெற மறுக்கின்றார் என்றால், அவரது உள்ளக்கிடக்கை என்ன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

கல்வித்திட்ட எதிர்ப்புக் கிளர்ச்சியிலும், இரயில் நிறுத்தக் கிளர்ச்சியிலும் ஈடுபட்டுக், கைதுசெய்யப்பட்டு, வழக்குத் தொடுக்கப்பட்டு, அபராதத் தொகை விதிக்கப்பட, அதனைக் கட்ட மறுத்துச் சிறைத்தண்டனை ஏற்றுத், தண்டனைக்காலம் முடிந்து, இல்லம் திரும்பிய தோழர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டு, ஏலத்திற்கு விடப்படுகின்றன என்றால், இன்றைய அரசாங்கம் எந்த அளவுக்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ள விரும்புகிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

'வழக்குத்தொடுத்துக் கழகத் தோழர்களை வாட்டி வதைப்பது' என்ற, ஆச்சாரியாரின் இந்த அறைகூவல் முறையை எதிர்த்து, ஆச்சாரியாரின் எண்ணத்தை முறியடிக்கும் வலிவையும் வன்மையையும், துணிவையும் தீரத்தையும் கழகத்திற்கு உண்டாக்கவேண்டிய கடப்பாடுடையவர்கள், நீங்காப்பற்றும் குறையாப் பண்பும் கொண்ட கழகத் தோழர்களே யாவார்கள். கழகத்துக்கு வலிவும் துணிவும் ஏற்பட எல்லாவளங்களும் பெருமைதரும் வகையில் இருக்கின்றன; ஆனால் பொருள் வளம் மட்டும் பூரிப்படையும் அளவுக்கு இல்லை. எனவேதான் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் இருபதினாயிரம் வெண்பொற்காசுகள் கேட்கிறார்கள். அறிஞர் அண்ணாவின் வேண்டுகோளை நிறைவேற்றக் கழகத் தோழர்களின் கைகளில் பூட்டப்பட்ட விலங்குகளைக் கூடுமானவரையில் உடைக்க, சிறைக் கதவுகளை முடிந்தவரையில் திறக்க, மேல் வீசப்பட்ட பழிச்சொற்களைப் போக்க, மாசு துடைக்க, வாரீர், வாரீர் என்று நாட்டின் நல்லவர்களை, இருகைநீட்டி அழைக்கிறோம்!

இந்தியா - இலங்கை உடன்படிக்கை

“நல்லது செய்யாவிட்டாலும் கெடுதலாவது செய்யாமலிருங்கள்” என்பது புறநானூற்றாசிரியர் ஒருவரின் பொன்மொழி.

இந்தியா இலங்கைப் பிரதமர்களின் உடன்படிக்கையைக் காணும்போது, மேற்கண்ட பொன்மொழியைத்தான் இந்தியப் பிரதமர் நேருவுக்கு நினைவுபடுத்தவேண்டியிருக்கிறது.

“இந்த உடன்படிக்கை இலங்கையிலுள்ள இந்தியர் பிரச்சினையைத் தீர்ப்பதாக இல்லை. சுமார் இரண்டு லட்சம் இந்தியர் இலங்கைக் குடிமக்களாக இது உதவலாம். ஆனால் பாக்கியுள்ள எட்டுலட்சம் இந்தியர் நிலை என்னவாகும்? இந்தியக் குடிமக்களாக இருக்க விருப்பமுள்ள இந்தியர் இலங்கையிலேயே இருக்க விரும்பினால் இரண்டு ஆண்டு தற்காலிகமாக வாழ அனுமதிச்சீட்டுடன் இருக்கலாம். இவ்விதம் இருக்கக்கூடியவர்கள் தொகை ஒரு இலட்சம் இருக்கலாம். அப்படியும் பாக்கியுள்ளவர்களுக்கு இந்த உடன்படிக்கை ஒன்றும் செய்யவில்லை” என்று இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவர் தோழர் எஸ். தொண்டமான் அறிவிப்பதிலிருந்து நிலைமையை அறியலாம்.

இந்த உடன்படிக்கையால் பாதிக்கப்படுவோர், தமிழர்கள்—திராவிடர்கள்தாம் ஏனெனில் அவர்கள்தாம் இந்தியர்களில் பெரும்பாலோராக இருப்பவர்கள். திராவிடர்களைப் பாதிக்கும் எந்த பிரச்சினை ஏற்பட்டாலும், அதைப்பற்றி வடநாட்டு நேருவுக்குக் கவலையில்லை; அவருக்கு எப்பொழுதும் வடநாட்டைப் பற்றியேதான் கவலை என்பதற்கு, இந்த உடன்படிக்கையே சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த அநீதியைத் துடைக்க திராவிடர்களின் சக்தி திரண்டெழுவதாக!

கருத்துக் கதிர்

நச்சுக்கொடி நகரிலும் படருகிறது

நாட்டுப்புறங்களில் ஆச்சாரியாரால் நடப்பட்ட நச்சுக்கொடி, இனி நகர்ப்புறம் நோக்கியும் படருமாம்! ஆச்சாரியார் ஆணை பிறப்பித்துவிட்டார். சிற்றூர்களிலும் பேரூர்களிலும் புகுத்தப்பட்ட புதிய ஆரம்பக்கல்வித் திட்டம், அடுத்தக் கல்வி ஆண்டிலிருந்து சிறு நகரங்களிலும், பெரு நகரங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமாம்.

புதிய ஆரம்பக்கல்வித்திட்டம் சிற்றூர்களில் புகுத்தப்பட்டு ஆறு திங்கள்களுக்கு மேலாகியும், அதன் தொழிற்பயிற்சி நோக்கம் இம்மியளவும் நிறைவேறவில்லை; படிப்பின் நேரம் பாதியாகி, விளையாட்டுநேரம் இரட்டிப்பானதுதான் மிச்சம். இந்தத் திட்டத்தால் வேறு பலன் ஏதும் ஏற்படவில்லை; பெற்றோர்களின் வேதனை மிகுந்ததுதான் கண்டபலன். புதிய கல்வித்திட்டம் புதுமைப் பொலிவையோ, பொருளாதார ஏற்றத்தையோ, கல்விப் பெருக்கத்தையோ, தொழில் நுணுக்கத்தையோ அளிக்கவல்லதல்ல— அளிக்கவில்லை என்பதை ஆயிரமாயிரம் எடுத்துக்காட்டுகளால் விளக்கி வருகிறோம்; கல்வித்துறை அறிஞரும் பிறரும் அதன் குறைபாடுகளை அன்றாடம் சுட்டிக் காட்டி வருகின்றனர். அறிஞர்கள் "வேண்டாம்" என்கின்றனர்; ஆனால் ஆச்சாரியார் "வைப்பேன்" என்கிறார்! அறிவை ஆணவம் அடக்குகிறது!

புதிய ஆரம்பக்கல்வித்திட்டம், இளம் மாணவர்களின் பருவத்துக்கு ஏற்றதல்ல; பண்புகளை வளர்க்காதது; ஏற்கனவே பெருகி வாழ்வுக்குத் திணறிக்கொண்டிருக்கும் குடிசைத் தொழில்களை மேலும் நெருக்கடிக்கு ஆளாக்க வழிகோலுவது; தேவையான விஞ்ஞான அறிவையும், விஞ்ஞான முறை உற்பத்தியையும் வளர்க்காதது; குலத்தொழிற்கல்வி என்ற முறையில், இழிந்த தொழில்களைச் செய்வோரைப் பரம்பரையாக இழிமக்களாகவும், உயர் தொழில்களைச் செய்வோரை பரம்பரையாக உயர்மக்களாகவும் என்றென்றும் வைத்துக் காப்பாற்றப் பயன்படுவது; உள்நாட்டு உற்பத்தியை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வழி வகுக்காதது; வெளிநாட்டு உற்பத்திப்பொருள்களுக்கு நிலையானச் சந்தையை உள்நாட்டில் ஏற்படுத்திக்கொடுப்பது; மாணவர்களைக் குடிசைத் தொழிலறிவிலேயே நிலையாக நிறுத்திவிடுவது; விஞ்ஞானத் தொழிலறிவைப் பெறுவதற்கான வாய்ப்பை மாணவர்களுக்குத் தராதது என்று ஆயிரமாயிரம் தடவைகள், உணர்த்தப்பட்டுள்ளது.

ஆச்சாரியார் பயிற்றுவிக்க விரும்பும் ஏர் பிடித்தல், கயிறு திரித்தல், ஓலைப்பாய் முடைதல், அறுப்பு அறுத்தல், தக்ளி நூற்றல், கைராட்டினம் சுற்றல், பானை வனைதல், கூடை பின்னுதல், மரம்செதுக்குதல், கல் அறுத்தல், இருப்பு தட்டுதல் போன்ற தொழில்களுக்கு நீண்டகாலப் பயிற்சி தேவையில்லை; மாணவர்கள் குறுகிய காலத்தில், பதினைந்து வயதிலும், பதினாறு வயதிலும், பதினெட்டு வயதிலும் கூடக் கற்றுக்கொண்டுவிடலாம்; ஐந்து வயதிலிருந்தே வாட்டி வதைக்கப்படவேண்டிய அவசியமில்லை. ஆனால் விஞ்ஞானத் தொழிற்பயிற்சிக்கு நீண்டகாலக் கல்விப்பயிற்சி தேவை. இந்த இரண்டு தொழிற்பயிற்சிகளில் நாடு கற்றுக்கொள்ளவேண்டிய தொழிற்பயிற்சி எது? விஞ்ஞானப்பொறித் தொழிற்பயிற்சியா? குடிசைக்கைத்தொழிற் பயிற்சியா? விஞ்ஞான பொறித்தொழிற்பயிற்சிதான் என்பதைச் சொல்லவேண்டுவதில்லை! இந்நிலையில் ஆச்சாரியாரின் கல்வித்திட்டம் கவைக்குதவுமா? ஒருக்காலும் உதவாது என்பதை நடைமுறை உலகு விடையிறுக்கும்! நாட்டுப்புறத்துக்கே ஒத்துவராத கல்வித்திட்டம் நகர்ப்புறத்திற்கு எப்படி ஒத்துவரும்?

ஆச்சாரியார் தம் ஆணவ முனைப்பில் பேசுகிறார்; எழுதுகிறார்; செய்கிறார். அறிஞர்கள் சொல்லுவதையும் செய்யாதவனாய்த், தானும் தெளியாதவனாய் இருந்து வருபவனது உயிர், இவ்வுலகைவிட்டுப் போகும் அளவும், உலகத்தார்க்கு ஒரு நோயாகும் என்னும் கருத்துப்பட,

"ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய்"

என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறுகிறார்.

அக்கருத்துக்கொப்ப கல்வி நிபுணர்கள் சொல்லுவதையும் செய்யாதவராய்த், தாமும் தேருதவராய் ஆட்சிப்பீடத்தில் இருந்துவரும் ஆச்சாரியார், அப்பீடத்தை விட்டு அகலும் வரையில், இந்த நாட்டுக்கு ஒரு நோய் என்பதைத் தவிர வேறு என்ன சொல்லுவதற்கு இருக்கிறது?

வர்ணாச்சிரம நச்சு நீரை நாடெங்கும் பீலிற்றும் நச்சுக்கொடியை, ஆச்சாரியார், நாட்டுப்புறங்களிலும் நகரங்களிலும் படரவிடுகிறார்! அவரது ஆணவத்தைப் பொதுமக்களின் வீறிட்டெழும் குரல்தான் ஒடுக்கவேண்டும்; அதனால் தான் ஒடுக்கவும் முடியும்!

ஃ ஃ ஃ

கும்பமேளா

மதவெறியும், மூடநம்பிக்கையும், குருட்டுப் பழக்கமும், மடமை வழக்கமும், அறியாமையும், அநாகரிகமும், காட்டுமிராண்டித் தன்மையும், வைதீகப்போக்கும் எந்த அளவுக்கு, இந்திய துணைக்கண்டத்தில், இந்து மதத்தால் வேரூன்றச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்கு கும்பமேளா சீரிய எடுத்துக்காட்டாகும்.

கும்பமேளா! நிர்வாணச் சாமியார்கள் நீராடச் செல்லும் விழா! அவர்களின் நிர்வாண கோலத்தைக் கண்டு, கசிந்துருகிக், களிப்புக் கண்ணீர் மல்கி, அடிதொட்டுக் கண்ணில் ஒற்றி, அவர்களை விழுந்து கும்பிட்டு, அவர்களின் ஆசிபெற்று, அவர்களோடே நீராடுவதற்காக நாற்பது இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கூடும் திருவிழா! இந்தத் திருவிழா வைக்காண குடியரசுத் தலைவர் பிரசாத்திலிருந்து குப்பைமேட்டுப் பிச்சைக்காரன் வரையில் பல்வேறு தரத்தினரும், திறத்தினரும் அண்மையில் அலகாபாத்துக்கு அருகிலுள்ள பிரயாகையில் கூடினர்!

கூடின இடம் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று ஆறுகளும் கூடுகின்ற துறையாகிய பிரயாகை! நாற்பது இலட்சம் பேர்களும் அந்தத் துறையில் இறங்கி மூழ்கினர்; குடியரசுத்தலைவர் பிரசாத்தும் மூழ்கினார்; அகில உலகம் சுற்றிவந்து, பொதுவுடைமை பேசிய பண்டித நேருவும் தலையில் தண்ணீரைத் தெளித்துக்கொண்டார். இத்துறையில் மூழ்கி எழுந்த இலட்சம் பேர்களும் கங்கைப் பெருநீர்ப்பிரவாகத்திலே மூழ்கியிருப்பார்களா அல்லது அவர்கள் விட்ட சிறுநீர்ப்பிரவாகத்திலே மூழ்கியிருந்திருக்கக் கூடுமா என்பது ஐயப்பாட்டிற்குரியதே!

"ஊர்வலங்களில் அநேகம் நாகர்கள் நிர்வாண கோலமாகவே சென்றனர். சந்நியாசினிகளும் ஊர்வலத்திலிருந்தார்கள்" என்று 3-2-54-ஆம் நாளிட்ட "சுதேசமித்திரன்" நாளிதழ்ல் செய்தி இருப்பதால், நிர்வாணக்கோலக் காட்சி தந்தவர்கள் ஆண் சந்நியாசிகள் மட்டுமல்ல, பெண் சந்நியாசினிகளும் ஆவார்கள் என்று தெரிகிறது.

பார்த்தாலே 'முத்தி' தரும் இந்த நிர்வாண கோலத்தைக்காண, அதுவும் இருபாலாரும் அளிக்கும் காட்சி விருந்தைப் பருக, இலட்சக் கணக்கான மக்கள், ஆடவரும் பெண்டிரும், குழந்தைகளும் குட்டிகளும், இளையவரும் முதியவரும், பணக்காரரும் ஏழைகளும், முதலாளிகளும் தொழிலாளிகளும், பக்திமான்களும் புத்திமான்களும் நெருக்கிக்கொண்டு வந்தனர். பலர் நசுக்குண்டனர்; துவண்டு கீழே விழுந்தனர்; மிதிபட்டனர்; உருத்தெரியாமல் சிதைந்தனர்; கூழாயினர்; இப்படி 'மோட்சம்' எய்தியவரின் எண்ணிக்கை, போய் வந்தவர்கள் செய்தித்தாள்களில் கொடுக்கும் கணக்குப்படி 1000-க்கு மேல். போலீஸார் கொடுக்கும் கணக்கே 316 என்றால், உண்மையான கணக்கு எவ்வளவு இருக்கக்கூடும் என்று ஊகித்தறிந்துகொள்ளலாமே!

தம்மை நெருங்கியவர்களைச் சாதுக்கள் இரும்புவேல்களைச் சுழற்றித்தாக்க, அதன் காரணமாகப் படுகாயமுற்றோரும், கைகால் ஒடிந்தவரும், உறுப்புகள் இழந்தவரும் பல்லாயிரக்கணக்கானவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

இதைத்தவிர குழந்தைகளைக் காணமல் விட்ட தாய்தந்தையர், கணவன்மார்களை விட்டுப் பிரிந்த காதலியர்கள், உடன் வந்தவர்களை விட்டுவிட்டுத் தன்னந்தனியாகப்பிரிந்தவர்கள் என்று இப்படியாகத் தவிப்புக்கு உள்ளானோர் இலட்சக்கணக்கானவர்கள் என்று கூறப்படுகிறது.

கூட்டத்தால் மிதிபட்டு, உயிருக்கு மன்றாடி

யோர் எழுப்பிய கூக்குரல், கூட்டத்தினரின் பேரிரைச்சலில் மங்கி மறைந்தது.

இவற்றைத்தவிர நீரில் மூழ்கி, திக்குமுக்காடி இறந்தோரின் பிணங்களும் கங்கைக்கரையில் ஒதுங்கிக் கிடந்தன.

இவ்வளவு துயர நிகழ்ச்சிகளும், பண்பாடமைந்த மக்களுக்கு அருவருப்பைத்தரும் 'கும்பமேளா' காட்சிகளும் நடைபெறும் வடநாடு, சமுதாயத் துறையில் எவ்வளவு காட்டுமிராண்டி நிலையிலிருக்கிறது என்பதை ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம். அந்த விழாவில் பங்கெடுத்துக்கொண்ட பண்டிதர்தான் தென்னாட்டுத் திராவிட இயக்கத்தினரை—பகுத்தறிவு நெறியினரைக் காட்டுமிராண்டிகள் என்று கூறினர். அவருடைய கடுமொழிக்கு உள்ளபடியே நூற்றுக்கு நூறு பொருந்தியவராயிருப்பவர்கள், தென்னாட்டினரா அல்லது அவரது நாட்டினரா என்பதைப் பண்டித நேரு, தம் ஓய்வு நேரத்தில் சிந்தித்துப் பார்ப்பாரேயானால், அவருக்கு உண்மை விளங்காமற் போகாது.

மதவெறியால் நாடு எவ்வளவு இழிவான நிலையில் இருக்கிறது என்பதற்கும், இந்திய துணைக்கண்டம் சீரடைவதற்குப் பகுத்தறிவு இயக்கப் பணிகள் எந்த அளவுக்குத் தீவிரமாகத் தேவைப்படுகிறது என்பதற்கும் 'கும்பமேளா'வே போதுமான அறிகுறியாகும்.

கும்பமேளாவைப் பார்த்துப் பகுத்தறிவியக்கம் சிரிக்கத்தான் செய்யும்; ஏ, வைதீகமே! நீ வெட்கப்படத்தான் வேண்டும்; தலையைத் தாழ்த்தத்தான் வேண்டும்! வேறு என்ன செய்வது ?

'கும்பமேளா' இந்தக்காலத்திலும் நடைபெறுகிறது என்றால், வைதீகம் அந்த அளவுக்கு அநாகரிகக்கோலம் பூண்டு நடமாட அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்கிறது; ஆதரவு தருகிறது; அதனைப் போற்றி வளர்க்கிறது என்று பொருள் கும்பமேளாவின் கொடுமைக்கும் கோரத்திற்கும் அரசாங்கம் மூலகாரணம் என்று சொல்லாவிட்டாலும், முக்கிய துணைக் காரணம் என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் குற்றத்துக்கு ஆளான அரசாங்கம் என்ன சமாதானம் கூறுமோ ? ஆனால் எந்தச் சமாதானமும் பொருத்தமற்றதாக இருக்கும் என்பது மட்டும் வழக்கத்தை ஒட்டிய உண்மையாகும்!

ஃ ஃ ஃ

பாக்கிஸ்தான் - அமெரிக்கா போர்முனை உறவு

பாக்கிஸ்தான்—அமெரிக்கா ஆகிய இருநாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள போர்முனை உறவு உலகியல் கண்ணோட்டத்தில் காணும்போது, அவசியமற்றது, ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்றே, உலக அமைதிச் சூழ்நிலையை விரும்பும் எவரும் கருதுவர்; நாமும் கருதுகிறோம்.

அந்த உறவு பாக்கிஸ்தானைப் பொறுத்த வரையில், கானல் நீர்போன்று மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகக் காணப்பட்டாலும், அதற்கே, அது ஆபத்தைத் தரும் நச்சுறவாக முடியும் என்பதை வருங்காலத்தில் உணரவே செய்யும்.

அமெரிக்கா—பாக்கிஸ்தான் போர்முனை உறவு ஏற்படடுவிட்டதைக்கண்டு இந்திய அரசாங்கம் கையைப் பிசைகிறது; திகைக்கிறது; திக்குமுக்காடுகிறது; என்ன செய்வது என்று ஏங்குகிறது.

இந்தியாவிற்கு உள்ளபடியே வீரம், உண்டென்றால், இந்த உறவைப்பற்றிக் கவலைப்படாமலிருந்திருக்கலாம்; விவேகம் உண்டென்றால், இப்படிப்பட்ட உறவு ஒன்று ஏற்படாமலேயே தடுத்திருந்திருக்கலாம். இரண்டும் இல்லை; எனவேதான் தவிக்கிறது!

இந்தியா, தன்னைப்பற்றி அகில உலகிற்குத் தம்பட்டமடித்துக் காட்டிக்கொள்ளும்போதெல்லாம், தனக்கு அவனி முழுதும் இருக்கும் செல்வாக்கு அபாரம் என்றும், தன்னுடைய வழியைப் பின்பற்றவும், தன்னுடைய ஆலோசனையைக் கேட்கவும், ஆசியநாடுகள் மட்டுமல்லாமல், அகில உலகநாடுகள் அனைத்தும் காத்துக்கிடக்கின்றன என்றும், இந்தியாவின் தலைமையையே அகில உலகமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும், இந்தியாவின் ஆத்மார்த்த துறையைப் பின்பற்ற எல்லா நாடுகளும் ஏங்கிக்கிடக்கின்றன என்றும் கூறிக்கொள்ளத்தவறுவதில்லை. இந்தியாவின் பிரதமரோ ஆசியாவின் ஜோதி, முடிசூடாமன்னர், மக்களுள் மாணிக்கம், காந்தியாரின் வாரிசு,

காஷ்மீர வித்தகர், காங்கிரஸ் தலைவர், பண்டித ஜவஹர்லால் நேரு! அவரின் புன்சிரிப்புக்காக அமெரிக்கா ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த தாகவும், அவர் அமெரிக்கா சென்றகாலை பூமாரி பொழிந்து, வேறுயாருக்கும் கொடுக்காத வரவேற்பை அமெரிக்கர்கள் நேருவுக்குக் கொடுத்ததாகவும் விளம்பரப்படுத்தப்பட்டது. மேலும் இந்தியாவின் அசோகசக்கரக்கொடி, அவனியில், ஏறத்தாழ ஐம்பது நாடுகளில பறக்கும் அளவுக்கும், சுமார் பன்னிரண்டு கோடி ரூபாய் செலவில் தூதுவராலயங்கள் உலகெங்கும் பரவிக்கிடக்கும் அளவுக்கும் இந்தியா செல்வாக்குப் பெற்றிருக்கிறது. ஐக்கியநாடுகள் அவையின் தலைவர் நேருப் பண்டிதரின் நேர் தங்கை விஜயலட்சுமிப் பண்டித அம்மையார்தான். அமெரிக்காவோடு நெருங்கிப்பழகவும், அமெரிக்காவின் நட்பைப் பெறவும் படியான முதல் வாய்ப்பும், முழு வாய்ப்பும் பாகிஸ்தானைவிட இந்தியாவுக்குத் தான் கிடைத்தன. இவ்வளவு செல்வாக்கும் பேரும் புகழும் இருந்தும், பாக்கிஸ்தானோடு போர்முனை உறவு கொள்ளாதபடி அமெரிக்காவுக்கு எடுத்துக்கூறவும், அதனைத்தடுத்து நிறுத்தவும் இந்தியா ஆற்றலற்றதாக இருந்திருக்கிறது என்றால், 'அரசியல் திறன்பாடு' இந்தியாவிடத்தில் எள்ளளவும் இல்லை என்பதைத்தானே அது காட்டுகிறது.

பாக்கிஸ்தான்—இந்தியா ஆகிய இரண்டிற்குமிடையே உள்ள உறவு சரிவர உருவாக்கப்பட்டிருந்தால், பாக்கிஸ்தான், இந்தியாவின் விருப்பத்திற்கு மாறாக, அமெரிக்காவோடு உறவு ஏற்படுத்திக்கொள்ளும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்குமா? இந்த வகையிலும் இந்தியா தன் அரசியல் திறன்பாட்டைக் காட்டவில்லை.

இப்படிப்பட்ட இந்தியாவின் சீர்கேடான கொள்கைகளால், திராவிடமும் சேர்ந்து சீரழிவுக்குக் காரணமாக ஆகவேண்டியிருக்கிறதே என்பதை எண்ணிதான் நாம் துயரப்பட வேண்டியிருக்கிறது.

வடநாட்டுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே, "இந்து-முஸ்லீம்", "காஷ்மீர்", "அகதிச் சொத்துக்கள்" போன்ற பிரச்சினைகளால் மூண்டெழுந்திருந்த மாற்சரியமல்லவா, பாக்கிஸ்தானை அமெரிக்காவோடு போர்முனை உறவு கொள்ளும்படித் துரத்தியது; அமெரிக்காவும் ரஷ்யாவை எதிர்த்து நிற்க இதை ஒரு நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது.

பாக்கிஸ்தான்—அமெரிக்கா போர்முனை உறவு உள்ளபடியே கண்டிக்கப்படவேண்டிய ஒன்று, கைவிடும்படி வற்புறுத்தப்படவேண்டிய ஒன்று. திராவிடம் தனியாகப் பிரிந்திருந்தால், இந்தச் சங்கடங்களெல்லாம் ஏற்பட்டிருந்திருக்கா, ஏற்படுவதற்குக் காரணமான அடிப்படைப் பிரச்னைகள் இங்கே எழ அவசியமில்லாததினால்!

—

இந்திய வரலாறு

"மிகப்பெரிய நாடு, புராதன கலாசாரம், வேதகால சரித்திரம் என்றெல்லாம் நமது தேசீய வரலாற்றாசிரியர்கள் இந்தியாவைப் பற்றி வர்ணித்தபோதிலும், வரலாற்றைப் புரட்டிப்பார்க்கும்பொழுது அடிக்கடி 'வெல்லப்பட்டது, கொள்ளையடிக்கப்பட்டது, அடிமையாக்கப்பட்டது' என்ற பகுதிகள்தாம் வருகின்றன. எதேச்சையாகத் திரிந்த கொள்ளைக்காரர்களுக்கு இந்தியாதான் நல்ல இலக்காக இருந்தது. இது வெட்கப்படவேண்டிய நிலையல்லவா? வருவோர், போவோர் எல்லோராலும் வாட்டி வதைக்கப்படும் நிலைமையில் இந்தியா கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்ததற்குக் காரணம் என்ன? உண்மையான காரணத்தை தேசீய சரித்திரக்காரர்கள் கூறுவதில்லை. இந்தியாவின் சமூக அமைப்பு அவ்வளவு கலகலத்துவிட்டது, சிறு தாக்குதலுக்குக்கூட தளர்ந்து விழுந்துவிடும் நிலையில். வெவ்வேறு காரணங்களால், வீட்டில் குடியிருந்தவர்களும், சுவர்களைப் பழுதுபார்க்காமலும், உளுத்துப்போனவற்றை நீக்கி, புதியவற்றைச் சேர்க்காமலும் இருந்துவிட்டனர். அதனால் இந்தியாவுக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லாதுபோயிற்று."

—எம். என். ராய்.

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

:: தலைசிறந்த அறிஞர் ::

தோழர் எம். என். ராயைப் பற்றி மான்சேஸ்டர் கார்டியன் என்ற ஆங்கிலப் பத்திரிக்கைத் தனது தலையங்கத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளது:

“பெரும்பாலான கம்யூனிஸ்ட்களைவிட திடுக்கிடக்கூடியதும், தீரச்செயல்கள் மிக்கதுமான வாழ்வில் ராய் இருந்தார். பின் அதை விட்டு, வெளிவந்தார், ஆனால் அப்பொழுது கம்யூனிசத்துக்கு எதிராக பிற்போக்குத் தன்மையடைந்துவிடவில்லை. மாறாக, முற்போக்கும், முன்னேவி— ஜனநாயகமும் உள்ள கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்.

அவருடைய கடைசி வாழ்நாட்களிலும், ஒரு சிறந்த சமதர்மவாதியாக அவர் தமது கருத்துக்களைப் பரப்பினார், ஆனால் அதே சமயத்தில் கட்டுப்பாடான அரசாங்கமோ, அரசியல் கட்சிகளின் அமைப்போ, நினைக்கவும் பேசவுமிருக்கும் அடிப்படை உரிமைகளை நசுக்கிவிடக்கூடாதென வாதிட்டார். தேசியம் என்பதன்பேரால், பகுத்தறிவுக்கொவ்வாத கொள்கைகளும் காட்டுமிராண்டிப் பழக்க வழக்கங்களும் வளர்க்கப்படுதல் கூடாதெனவும் அவர் கருதினார்.

கடைசியாக அவர் ஒரு தலைசிறந்த பகுத்தறிவுவாதியாகத் திகழ்ந்தார்; அவருடைய ஆராய்ச்சித்திறன், எல்லாவகை அறிவியல் துறைகளிலும் நன்கு முன்னேறியிருந்தது. மேல்நாட்டு பண்பாட்டையும் நன்கு அறிந்த இந்தியர்களில், ராயும், ஜவஹர்லால் நேருவும் குறிப்பிடத்தக்கவர்கள். ஆனால் அரசியலில் நேரு வெற்றிபெற்றதைப்போல ராய் வெற்றிபெறவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக, ராயிடம் மற்றெவரிடமும் இல்லாத அளவு அரசியல் நுண்ணறிவும், எதிர்காலத்தை அளவிட்டுரைக்கும் ஆற்றலும் இருந்தன. அவர் முன்னிட்டுக் கூறியவற்றில் பல, பின்பு உண்மையாக நடந்தேறின,

விடுதலைவேட்கையும், பகுத்தறிவு உணர்வும் இந்தியாவில் வெற்றிபெறுமானால், அதற்காக அடிக்கடி நினைவு கூறப்பட்டு, பாராட்டப்படவேண்டியவர்களில் தோழர் எம். என். ராய் மிக முக்கியமானவர். அவருடைய இறப்பினால், ஆசியா ஒரு தலைசிறந்த அறிஞரை இழந்துவிட்டது.”

●

ராயின் கருத்துரைகள்

சமூகப் புரட்சி

“சாஸ்திர, சம்பிரதாயங்களின்கீழும், மூடநம்பிக்கைகளின் கீழும் அழுந்திக்கிடக்கும் மனப்பான்மையை விடுவிக்கவேண்டும். அது தான் உண்மையிலேயே சிறந்த—வரலாற்றில் மிகப்பெரும் புரட்சியாக இருக்கும். அது அரசியல் ஆட்சியை மாற்றிவிடுவது என்பதை விடக் கடினமான வேலைத்திட்டமாகும். சிதைந்துகிடக்கும் சமூக அடிப்படையை முழுவதும் அகற்றிவிட்டு, புதிய அமைப்பு காணவேண்டும், மனப்பான்மையில் அரித்து வரும் பலவகைத் தொத்துநோய்களுக்குக் காரணமாகயிருக்கும் அழுகல் பண்டங்களை அகற்றவேண்டும், முடை நாற்றத்தையும், மயக்கந்தரும் விஷவாடையையும் நீக்கவேண்டும். இவைகளைச் செய்த பிறகுதான், உரிமைகளின்மீது கட்டப்படும் புதிய அமைப்பு உண்டாகும்.”

ஃ ஃ ஃ

அடிமைத்தனத்திற்கு அடிப்படை

“விதியில் நம்பிக்கை வைப்பது ஒருவனைச் செயலற்றவனாக ஆக்கிவிடுகிறது. அது இந்தியாவில் எதுவந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற மனப்போக்கை உண்டாக்கி

விட்டது. எதிர்த்துப் போராடும் சக்தி சமூகத்திற்கு இல்லாதுபோனதால், அடிமையும், துன்பங்களும் இங்கே சூழ்ந்துகொண்டன.”

ஃ ஃ ஃ

விஞ்ஞானமும் வேதாந்தமும்

விஞ்ஞானத்தை எதிர்த்து வேதாந்தம் போர் புரியக் கிளம்பும்போதெல்லாம், வேதாந்தம் மீட்சிபெறமுடியாத படுதோல்வியே பெற்று வந்திருக்கிறது. விஞ்ஞானத்தின் படைக்கருவிகளுக்கு முன்னால், வேதாந்தம் தன் படைக்கருவிகளை வலிவான முறையில் ஏந்திச் செல்ல முடிந்ததேயில்லை. சிலவேளைகளில் வேதாந்தத்தின் போர் முறை முட்டாள்தனமாகவும், அதற்கே முழு அழிவைத் தேடித்தருவதாகவுமே அமைந்துவிடுவதுண்டு. விஞ்ஞானத்தை எதிர்க்கும் வேதாந்தியின் முடிவு அந்தப் படியே முடிவதைப் பார்க்கலாம். விஞ்ஞானமும் பகுத்தறிவும், வேதாந்தம் என்னும் எதிரியின் கூடாரத்திலேயே சென்று வெற்றிகரமாகப் போரிடும் வலிமைபடைத்தன. ஆனால் வேதாந்தம் விஞ்ஞானத்தின் கூடாரத்தை நெருங்கவே அஞ்சும். விஞ்ஞானத்தின் சவாலை வேதாந்தம் ஏற்று வெற்றிபெற்றதில்லை.”

ஃ ஃ ஃ

பாழ்படுத்தும் பழைமை

“மதம் அறியாமையின் மீது கட்டப்பட்டதாகும். மூட நம்பிக்கையினை அடிப்படைத் துணையாகக் கொண்டிருக்கும் மதம், குருட்டுப் பழக்க வழக்கங்களைக் காப்பாற்றுவதன் மூலம் தன் வாழ்வை வளப்படுத்திக்கொள்ள விரும்புகிறது. இது இந்தியாவின் எதிர்காலத்தை மிகக் கடுமையாகப் பாதிப்பதாகும். பாமர மக்களை எடுத்துக்கொண்டால், அறியாமை, மூடநம்பிக்கை, அழிவு ஆகியவைகள்தாம் அவர்களின் பண்பாடாக இருந்துவருகின்றன. எதற்கும் அடங்கிப்போகும் மனப்பான்மை, எப்படி ஒரு நாட்டிற்கு விடுதலையை வாங்கித் தரும்? ஒரு நாடு தேசிய விடுதலையடைவதற்கு, அமையவேண்டிய முதல் சூழ்நிலை, இறந்தகாலப் பழைமைப்பிடியிலிருந்து முதலில் தன்னை விடுவித்துக்கொள்வதுதான். இறந்தகாலத்துக்கு அப்படியே தலைவணங்குவது நிகழ்காலத்திற்குச் செய்யும் துரோகமாகும். இறந்தகாலத்துக்கு அடிமைப்பட்டவன், இனி வருங்காலத்தின் வெற்றிவீரனாகத் திகழ முடியாது.”

ஃ ஃ ஃ

புரட்சியின் தேவை

புரட்சி ஒரு சமூகவரலாற்றில் தவிர்க்கமுடியாத கட்டமாகும். அது ஒரு அவசியத்தின் பேரிலேயே உண்டாகிறது. அத்தகைய புரட்சியில், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவும் பாதிக்கப்படுகின்றன; சமூகத்தில் பெரும்பகுதியினரும் புரட்சி வேகத்தில் ஈர்க்கப்படுகின்றனர், இல்லாவிடில் புரட்சி வெற்றிகரமாக நடந்தேறாது. ஆனால் சமூக, அரசியல் அமைப்புகளில் ஏற்பட்டுள்ள பிற்போக்குத் தன்மைகளைப் போக்கி முன்னேற்றத்தைக் காண ஒரு புரட்சி தேவையென்ற எண்ணம் முதலில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆரம்பத் தூதர்களின் முயற்சியாலும், முன்னோக்கத்தாலும்தான், புரட்சியின் போக்கும், வேகமும் வளர்க்கப்படுகின்றன; பின் புரட்சி வலுப்பெற்று வெளிப்படுகிறபொழுது, சமூக—அரசியல் அமைப்புகளைத் தலைகீழாக மாற்றியமைக்கும் வலுவைப்பெறுகிறது. அதுவுமன்னியில், நடைபெறப் போகிற புரட்சியின் போக்கு, எண்ணத்தில் ஏற்படுகிற மாறுதல்களில் ஒருவாறு காணப்படும். பொதுவாகச் சொன்னால், மிகப்பெரும் புரட்சிகளாக வெற்றிபெற்றவையெல்லாம், சமூகப் புரட்சிகளாகும்: சமூகப் புரட்சிக்கு முதலில் கருத்துப்புரட்சி உண்டாக வேண்டும்.

ஃ ஃ ஃ

பழைமை விலங்குகள்

பழைமையிலிருந்து, நல்லவைகளாக மிகுந்திருப்பவைகளை மட்டும் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். அஃதன்றி பழைமையின் முழு பாரத்தையும் சுமந்துகொண்டால், முன்னேறுவது முடியாத காரியம். பழைமை விலங்குகள் முறிக்கப்பட்டாலன்றி, முன்னேற்றப் பாதையில் முன்செல்ல முடியாது.

"லெனினை நான் சந்தித்தேன்"

(எம். என். ராய்.)

[தோழர் எம். என். ராய் தன்னுடைய பன்னிரண்டாவது வயதிலேயே புரட்சி இயக்கத்தினருடன் சேர்ந்துகொண்டார். முதலாவது உலகப்போர் (1914—18) மூண்ட பொழுது இந்திய புரட்சி யியக்கத்தினர்க்கு ஆயுதங்கள் தேடிக் கொண்டுவருவதற்காக, ராய் இந்தியாவை விட்டு வெளியேறி, ஜப்பான், சைனு இவைகளில் சுற்றிவிட்டு, அமெரிக்கா சென்றுவிட்டார். அங்கு கைதுசெய்யப்பட்டு, வழக்கு நடைபெறும்பொழுது, தப்பித்துக் கொண்டு மெக்சிகோ சென்ருர். மெக்சிகோ அரசியலில் ஈடுபட்டு, சோஷியலிஸ்ட் கட்சி யொன்றை உண்டாக்கி. அதன் பொதுச்செயலாளர் பதவியையும் வகித்தார். அவர் பாடுபட்ட தன் விளைவாக மெக்சிகோவில் அரசியல் புரட்சி யொன்று மூண்டது. ராய் ஆற்றிய வேலை களைக் கேள்விப்பட்டு, ருஷியப் புரட்சித்தலைவர் லெனின் மாஸ்கோவில் நடைபெறவிருந்த இரண்டாவது உலகக் கம்யூனிஸ்ட் காங்கிரசுக்கு வரும்படி அழைத்தார். அழைப்பையேற்று, ராயும் மிகக் கஷ்டத்துடன் மறைந்து மறைந்து ருஷியா வந்தடைந்தார்.

அப்பொழுதுதான், முதல்தடவையாக ராயும், லெனினும் சந்தித்தனர். அந்தச் சந்திப் பைப்பற்றி ராய் எழுதிய குறிப்பு கீழே தரப்பட்டிருக்கிறது.]

மாஸ்கோவிலிருந்த உலகக் கம்யூனிஸ்ட் அமைப்பின் (கம்யூனிஸ்ட் இன்டர் நாஷனல்) தலைமை நிலையத்திற்கு நான் அழைத்துச் செல லப்பட்டேன். பலம்பொருந்திய அந்த உலக அமைப்புக்குப் பொதுக் காரியதரிசியாக இருந்த தோழியர் பால்பனேவா முன் நான் சென்றேன். அதற்கு முன்னமே அவருடன் நான் அறிமுகம் செய்யப்பட்டிருந்தபோதிலும், என்னுடன் பேச நேரமின்றி, பால்பனேவா தன் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அந்தக் காலத்தில், உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகளை யெல்லாம் ஒன்றுசேர்த்துக் கவனிக்கவேண்டிய பெரும்பொறுப்பை மிகவும் திறமையுடனும், போற்றத்தக்க விதத்திலும் செய்துகொண டிருந்த பெண்மணி தோழியர் பால்பனேவா ஆவார்கள். அவர்முன், பொறுமையிழந்து போகும்வண்ணம் சுமார் கால்மணி நேரம் வரை பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டி யிருந்தது.

திடீரென்று, தான் புரட்டிக்கொண்டிருந்த பேப்பர்களை மூடிவைத்துவிட்டு, பால்பனேவா டெலிபோனை எடுத்து கிரெம்லினுடன் பேசத் தொடர்பு கேட்டார்கள். பிறகு சிறிதுநேரம் ரஷிய மொழியில் ஏதோ பேசினர்கள். பேச் சின் முடிவில் என் பெயர் சொல்லப்படுவது மட்டும் எனக்குப் புரிந்தது. அப்பொழுது நான் ரஷிய மொழியில் பயிற்சி பெறவில்லை. டெலிபோனைக்கீழே வைத்ததும், பால்பனேவா தாம் படித்துக்கொண்டிருந்த இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையைப்பற்றிச் சிறிது பேசினர்கள். பின் திடீரென்று பேச்சை மாற்றி, "இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் லெனினை நீங்கள் பார்க்கலாம். அவரைச் சந் திப்பதற்குள் இந்தக் கட்டுரையைப் படித்து வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி, என்னிடம் பால்பனேவா சில பேப்பர்களைத் தந்தார்கள். லெனினுடன் சந்திப்பு! நான்

மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது! அதுவும் இன்னும் ஒருமணி நேரத்துக்குள்!

என்னிடம் கொடுக்கப்பட்ட தாள்களை எடுத்துக்கொண்டு, அந்த அறையின் மூலையில் போடப்பட்டிருந்த ஒரு மேஜைமுன் உட்கார்ந்து, படிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது பார்த்தால், பால்பனோவா ஒரு வாத்தியாரைப் போலவும், நான் பள்ளிக்கூடத்தில் பாடம் படிக்கும் சிறுவனைப்போலவும் காணப்பட்டிருக்கும்! நான் வைத்திருந்த கட்டுரை, தேசிய—காலனி பிரச்சினையைப் பற்றி லெனின் எழுதியதின் ஆங்கில மொழிபெயர்ப்பாகும். அப்பொழுது கூடவிருந்த உலக கம்யூனிஸ்ட் காங்கிரஸில் விவாதிக்கப்படப்போகிற பெரிய விஷயங்களில், தேசிய காலனி பிரச்சினையும் ஒன்றாகும். அதைப்பற்றி, என்னிடம் லெனின் விவாதிக்கப்போகிறார் என்பதும் எனக்கு முன்கூட்டியே தெரியும். என்னிடம் தரப்பட்ட லெனின் கட்டுரையைப்பார்த்ததும், முதலாவதாக மேலே வைக்கப்பட்டிருந்த சிறு காகிதம் என் கவனத்தைக் கவர்ந்தது. அதில் "தோழர் ராயின் கருத்துக்கும், ஆலோசனைகளுக்கும்" என்று எழுதப்பட்டு, கீழே "வி. ஐ. லெனின்" என்ற கையெழுத்தும் இருந்தது. அதைப் படித்ததும், ஒருகணம் எனக்கு மலைப்புத் தட்டியது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமுன், ஊர் பேர் தெரியாது, நாட்டைவிட்டோடி அலைந்து திரிந்த ஒருவன், இன்னும் ஒருமணி நேரத்தில் வரலாற்றில் மாபெரும் மனிதராக விளங்கிடும் ஒருவரை சந்திக்கப்போகிறான்! அதிலும் அவனுடைய கருத்தைக் கேட்க, அந்தப் பெரும் தலைவர் விருப்பமுள்ளவராக இருக்கிறார்! என் மனதில் கிரெம்லின் மாளிகையில் லெனின் இருப்பது, அவரை நான் சந்திப்பது, பேசுவது போன்ற காட்சிகள் தோன்றி மறைந்தன. எனக்கேற்பட்ட பரபரப்பில், உள்ளக் கிளர்ச்சியில், என்னிடம் தரப்பட்ட கட்டுரையைச் சரியாகக் கவனத்துடன் படிக்க முடியவில்லை. அதற்குள் நான் அங்கிருந்து கிளம்ப வேண்டிய நேரம் வந்தது. பால்பனோவாவின் காரியதரிசி ஒருவன் என்னை அழைத்துக்கொண்டு சென்றான்.

கிரெம்லின் அரண்மனையின் வாசற்படியை நாங்கள் அடைந்தோம். வாசற்படியில் காவல் நின்றவர்களிடம், என்னுடன் வந்தவர் ஒரு சீட்டைக் காட்டினார். பின் உள்ளே போக அனுமதிக்கப்பட்டோம். பின் அடுத்த வாசற்படியில் நாங்கள் நிற்கவேண்டியதாயிற்று. அங்கிருந்தவர்கள் லெனினுடைய காரியதரிசிக்கு டெலிபோன் செய்து, நான் வந்திருப்பதை உறுதிசெய்தார்கள். அங்கிருந்து அனுமதி வந்ததும், நாங்கள் உள்ளே சென்றோம். அந்த இடம் முன்பு ஜார் மன்னர்கள் முடிசூடும் மண்டபமாக இருந்ததாம். புரட்சிக்குப்பின், சோவியத் அரசாங்கத் தலைவர்களில் ஒருவர் தங்குமிடமாக ஆயிற்று. அங்கெல்லாம் பாதுகாப்புக்காக போர்வீரர்கள் மிகக் கண்டிப்பான முறையில் காவல்புரிந்துவந்தனர். மிகபெரிய பளிங்குப் படிக்கட்டுகள், நீண்ட தாழ்வாரங்கள், உயர்ந்த அறைகள் இவைகளைக் கடந்து நாங்கள் சென்றோம். ஆனால் அவற்றையெல்லாம் நான் சரியாகக் கவனிக்கவில்லை. இன்னும் சில நிமிடங்களில் உலகப் புரட்சியின் மாபெரும் தலைவரைச் சந்திக்கப்போகிறோம் என்ற எண்ணமே என் உள்ளத்தைப் பற்றியிருந்தது.

கடைசியாகச் சிறிதுகூடச் சத்தமில்லாமல், சுமார் பன்னிரெண்டு பேர் உட்கார்ந்து வேலை செய்துகொண்டிருந்த ஒரு ஹாலை அடைந்தோம். அதுதான் லெனினின் அலுவலகமாகும். அந்த இடத்துக்குத் தலைமைவகித்தது, மேரியா என்ற பெண்ணாகும். தலை நரைத்து, மிகவும் மெலிந்து காணப்பட்ட அவள்தான், லெனினுடைய நேரத்தையும், வேலைகளையும் கவனித்து வந்தாள்.

லெனினுடைய நேரத்தை வீணாக்காமல், மிகக் கண்டிப்புடனும், திறமையுடனும் அவள் வேலைகளை ஒழுங்குசெய்துவந்தாள். மாஸ்கோவிலும், ருஷிய கம்யூனிஸ்ட் கட்சியிலும் அவளைப்பற்றித் தெரியாதார் இருந்திருக்க முடியாது.

லெனினுடைய அலுவலகத்துக்குமுன், ஒரு பெரிய அறை இருந்தது. அதில்தான் லெனினைச் சந்திக்க வருபவர்கள் காத்திருக்கவேண்டும். பெரும்பாலும் அது காலியாகக் கிடக்கும். ஏனென்றால் குறித்த நேரத்தில் வந்ததும், உடனே லெனினைச் சந்தித்துவிடலாம். நேரத்துக்கு, லெனின் தந்ததைப்போன்ற, வேறெவரும் மதிப்புத் தந்திருக்கமுடியாது. குறித்த நேரத்தில் வருவதே தகுதிக்குக் குறைவானது என்று மற்ற போல்ஷ்விக் தலைவர்கள் கருதிக்கொண்டு நேரத்தைப் பற்றி அக்கரை காட்டா

மல் இருப்பார்கள். குறித்த நேரத்தில் வருவது ஒரு பூர்ஷ்வா மனப்பான்மை யென்றே நினைத்தனர். கம்யூனிஸ்ட் இண்டர்நாஷனல் கூட்டமாயிருந்தாலும் சரி, அதன் காரியதரிசியே மணிக்கணக்கில் நேரங்கழித்துதான் வருவார். தகுதியும் பதவியும் உயர உயர, நேரத்தைப் பற்றிய அலட்சியம் அதிகமாக யிருக்கும். ஆனால் இவற்றுக்கெல்லாம் விதிவிலக்காக லெனின் இருந்தார். அதனால்தான், லெனினைச் சந்திப்பவர்கள் எவரும் முன் அறையில் காக்க வைக்கப்படுவதில்லை. லெனினைச் சந்திக்கப் போகுமுன், சந்திப்பு நேரம் எட்டுநிமிடம், ஒன்பது நிமிடம் என்று வரையறுக்கப்பட்டிருக்கும், அந்த நேரம் முடிந்ததும், லெனின் மேஜையிலிருக்கும் ஒரு விளக்கு எரியும், உடனே பேசவந்தவர் வெளியேறிவிடவேண்டும். அடுத்துப் பார்க்க வந்தவர் தயாராக வைக்கப்பட்டிருப்பார். இந்த வேலையை மேரியா மிகக் கண்டிப்புடன் கவனித்துவந்தாள், லெனினே விரும்பினாலும்கூட நேரத்தை வீணாக்கமுடியாதபடி.

நாங்கள் லெனின் அலுவலகத்தை அடைந்ததும், வேலையில் ஈடுபட்டிருந்த யாரும் எங்களைக் கவனிக்கவில்லை. மேரியாமட்டும் தன்னிடத்தில் எழுந்துநின்று சுவரிலிருந்த கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டாள்; பின் எதுவும் பேசாமல், என்னை வந்து அழைத்துக்கொண்டு போய், ஒரு பெரிய கதவை மெதுவாகத் திறந்து, உள்ளே போகும்படி தலையசைத்தாள். நான் உள்ளே நுழைந்தேன், கதவு பின்னால் மெதுவாக மூடிக்கொண்டது.

அது மிகப் பெரிய அறையாகும். சுவர்கள் உயர்ந்து, இருந்தன. மிக அகன்ற ஜன்னல்கள் வெளிப்புறக் காட்சிகளைத் தந்தன. தரையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தைத் தவிர, அந்த அறையில் வேறொன்றையும் காணோம். காலியாகக் காணப்பட்ட அந்த அறையின் மத்தியில் ஒரு பெரிய மேஜையும், அதன்பின் ஒரு வழுக்கைவிழுந்த தலை சாய்ந்து இருப்பதையும் நான் உடனே கவனித்தேன். எனக்குச் சிறிது அச்சம் உண்டாயிற்று. சத்தம் செய்யாமல், மேஜையை நோக்கி, மெதுவாக நடந்து செல்ல நான் ஆரம்பித்தேன். கதவிலிருந்து மேஜை நீண்ட தூரத்தில்தான் இருந்தது. கம்பளம் மிகக் கனமாக இருந்ததால், நடக்கும் சத்தம் கேட்கவில்லை. நான் பாதிதூரம் நடந்து சென்றதும், தாழ்ந்திருந்த தலை நிமிர்ந்தது, உட்கார்ந்திருந்தவர் எழுந்து வலது கரத்தை நீட்டி வரவேற்க, என்னை நோக்கி வந்தார். லெனின் முன் நான் நின்றேன்!

லெனின் உயரத்தில் சற்றுக் குறைந்தவராயிருந்ததால், என்னைப் பார்ப்பதற்குத் தலையைச் சாய்த்து, மேல்நோக்கி அண்ணாந்து பார்க்கவேண்டியிருந்தது. அவர் என்னைப் பார்க்கும்பொழுது, நான் குழப்பமடைந்து என்ன பேசுவதென்று தெரியாமல் திகைப்புடன் நின்றேன். என்னுடைய குழப்பத்தைக் கண்ட லெனின், "நீ நல்ல இளைஞனாக இருக்கிறாய்! கிழக்கு நாட்டிலிருந்துவரும் ஒரு தாடி நரைத்த கிழவனைத்தான் சந்திக்கப்போகிறோம் என்று நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்!" என்று என் முதுகில் தட்டிக் கொடுத்துச், சிரித்தார். அவர் எதிர்பார்த்தபடி இல்லாமல், இருபத்தேழு ஆண்டு நிரம்பாத ஒரு இளைஞன் அவர்முன் நின்றது அவருக்கு ஆச்சரியத்தைத் தந்திருக்கலாம்.

மிக உன்னிப்பாகப் பார்த்ததும், பின் புன்னகைதவழப் பேசியதும், முதுகில் தட்டிக் கொடுத்து வேடிக்கையாகச் சிரித்ததும், என்னுடைய குழப்பத்தைப் போக்கின. வெளியுலகில், லெனினென்றால் மனிதத்தன்மையை மறந்து இயந்திரத்தைப் போல் வேலைசெய்து வரும் ஒரு புரட்சித் தலைவனென்றும், அவருடைய பெரிய தலையின் பாரத்தின் கீழ் இருதயம் நெறிக்கப்பட்டுவிட்டதென்றும் அவரைப் பற்றி வருணிப்பார்கள். அவையெல்லாம் எவ்வளவு பொய்மையானதென்பது, நேரில் பார்க்கும்பொழுது தெரிந்தது. அவருடைய குறுகுறுத்த பார்வையில் கனிவு இருந்தது, புன்னகையில் களங்கமற்ற இதயம் எதிரொலித்தது. அவரது சிரிப்பு, தானெடுத்த முயற்சியில் வெற்றிபெறுவோமென்ற நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இருந்தது. அந்த அசையாத நம்பிக்கைதான் அளவுக்குமீறிய நம்பிக்கைகூட—குழப்பம் தோன்றிய ருஷியாவில் வெற்றிகரமான புரட்சியை முடித்துக்கட்ட அவரைத் தூண்டியது. அந்தவகையில் மற்றெவருக்கும் இல்லாத வகையில், எதிர்காலத்திலும், தனது குறிக்கோளிலும் லெனினுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. அவரிடம் அத்தகைய உறுதியான நம்பிக்கையிருக்கிற

தென்பது. அவர் சிரித்துப் பேசும்பொழுதே கண்டு பிடித்துவிடலாம்.

தனது சிரிப்பினால் எனக்கிருந்த அச்சத்தை நீக்கியதும் லெனின் திரும்பி தனது இடத்தை நோக்கி நடந்தார். கொஞ்சம் தெளிவடைந்த நிலையில், அவரை நன்றாகப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் நடந்து சென்றபொழுது; அவருடைய குறைந்த உயரம் நன்றாகத் தெரிந்தது. அதிலும் சுவர்கள் மிக உயரமாக இருந்த அந்த அறை அவரது உயரத்தை இன்னும் குறைத்துக் காட்டியது. இதிலிருந்து லெனின் மிகக் குள்ளமானவர் என்று எண்ணிவிடக் கூடாது. அவருடைய சரியான உயரம் 5 அடி 4 அங்குலம் என்று நினைக்கிறேன். அவருக்கிருந்த மற்றொரு பழக்கம் அவரைக் குள்ளமாகக் காட்டியது. அதாவது. நடந்து செல்லும் பொழுது, பக்கத்திலோ, எதிரிலேயோ நிமிர்ந்து பார்க்காமல். குனிந்து பார்த்தபடிதான் லெனின் நடப்பார். நடந்து செல்லும்பொழுதும் ஏதோ தீவிரமாக எண்ணிக்கொண்டிருக்கிறார் என்று தோன்றும்; மேலும், நடக்கும்பொழுது வெகு விரைவாகத்தான் நடந்துசெல்லுவார். உயரம் அதிகமில்லாதவர், சற்றுக் குனிந்து, மிக விரைவான நடையுடன் சென்றால், உயரம் அதிகம் குறைந்தவர்போலத்தான் தோன்றும். அவர் என்னிடமிருந்து பிரிந்து, மேஜைக்குப்பின் அவருடைய இடத்துக்குப் போகும் பொழுதுகூட, மிக விரைவாகத்தான் நடந்தார். அவர் விரைவாகச் செல்வது. கிடைத்த நேரம் போதாமல்–ஆனால் அதற்குள் எடுத்த காரியத்தை முடித்துவிட வேண்டுமென்று அவசரப்படுவது போலிருக்கும். அதனால்தான் அவர் பேசும்பொழுது அதிக நேரம் எடுத்துக்கொள்வதில்லை. கட்சியின் முக்கிய கமிட்டிக்கூட்டங்களில்கூட. விவாதத்தில் கலந்துகொள்பவர்கள் முதல் தடவை பேச எழுந்தால் பதினைந்து நிமிஷமும், இரண்டாவது தடவையாக எழுந்தால் ஐந்து நிமிஷமும் பேசமுடியும். விரைவாக அவர் எண்ணியபோதிலும், பேசும்பொழுது மெதுவாகவும். விளக்கமாகவுமே பேசினார். பொதுக் கூட்டங்களில் பேசுவதைத் தவிர்த்து, மற்ற இடங்களில் அவர் பேசும்பொழுது. வகுப்பறையில் பாடஞ் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியரைப் போலத்தான் அவரது பேச்சும் இருக்கும். அதிலும் நான் அப்பொழுது ஒரு புது மாணவனைப்போல, அந்தப் புரட்சி ஆசிரியர்முன் நின்றேன்.

லெனின் போய் மேஜைக்குப்பின். அமர்ந்ததும். முன் பக்கத்தில்போடப்பட்டிருந்த நாற்காலியில் நான் உட்கார்ந்தேன். மேஜைமேல் கையை ஊன்றி. என் பக்கம் சாய்ந்து, புன்னகை தவழ, லெனின் மீண்டும் என்னைப் பார்த்தார். அது; தன் முன் இருக்கும் மகனை அவன் தந்தை பாசத்துடனும். நம்பிக்கையுடனும் பார்த்துப் புன்னகை செய்வதுபோலிருந்தது. முதலிலிருந்தே அச்சமும், குழப்பமும் போய்விட்டதால், லெனின்—ஒரு பெரும் புரட்சித்தலைவர்—மிகக் கடுமையான சர்வாதிகாரி—ஆகிய ஒருவரின் முன் உட்கார்ந்திருக்கிறோம் என்ற எண்ணம்போய் நெடுநாள் பழகிய ஒருவரின் முன் உட்கார்ந்திருக்கிறோம் என்ற எண்ணம் வந்தது.

முதலில் லெனின் பேச ஆரம்பித்தார் மெக்சிகோவில் நான் செய்த வேலைகளையும் உண்டாக்கிய புரட்சி இயக்கத்தைப் பற்றியும் தாம் கேள்விப்பட்டதாகவும். ஆனால் அவற்றைப்பற்றி அதிகமாக நேரில் கேட்டறிந்துகொள்ள விரும்புவதாகவும் அவர் கூறினார். மெக்சிகோவிலும் மத்திய அமெரிக்க நாடுகளிலும், புரட்சி வெற்றிபெறுவதற்கான சூழ்நிலைகள் உண்டானபோதிலும். அமெரிக்க ஏகாதிபத்தியம் தலையிட்டு அவற்றைத் தடுக்க முயலும். ஆனால் ஆசியாவிலும். மற்ற பிற்போக்கு நாடுகளிலும் புரட்சி உண்டாவதற்கான சூழ்நிலையை கவனிக்காமல் இருந்துவிடக்கூடாதென்றும் லெனின் கூறினார். பின் அவர் தேசிய காலனி நாடுகளைப்பற்றிப் பேசினார்.

"நான் அனுப்பிய கட்டுரையைப் படித்துவிட்டீர்களா?" என்று லெனின் கேட்டார்.

"இல்லை. நான் உங்களைச் சந்திக்க வருவதற்குச் சற்றுமுன்தான் என்னிடம் அந்தக் கட்டுரை தரப்பட்டது. இன்னும் இரண்டொரு தினங்களில் படித்துவிடுவேன்" என்று நான் பதிலளித்தேன்.

நான் படித்து முடித்ததும் அதைப்பற்றிய விவாதத்தை வைத்துக்கொள்ளலாமென்று லெனின் கூறினார். அப்பொழுது கூடவிருந்த உலக கம்யூனிஸ்ட் காங்கிரசில். தேசீய-காலனிப் பிரச்சினை பற்றிய நோக்கமும் திட்டமும் கூறப்படவேண்டுமானதால், அதைப்பற்றிய முடிவான கருத்துக்கு வர லெனின் ஆவலுள்ளவராயிருந்தார்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, லெனின் முன்னாலிருந்த விளக்கு எரிந்தது. அதைப் பார்த்ததும் லெனின் நாற்காலியில் சாய்ந்து, "இத்துடன் இந்தச் சந்திப்பு முடிகிறது, அது மேரியாவின் உத்தரவு!" என்று புன்னகை செய்தார். நான் வணக்கம் செலுத்திவிட்டு வெளியேற எழுந்தேன். அதற்குள் லெனின் எழுந்து. என் பக்கத்திற்கு வந்துவிட்டார். என் கையைப்பற்றி அழைத்துக்கொண்டு கதவருகில் வந்தார். அப்பொழுது கதவு திறந்து. மற்றொருவர் உள்ளே வருவதற்குத் தயாராக இருந்தது. வெளியே போகஇருந்த என்னை நிறுத்தி. உள்ளே வரவிருந்தவரிடம் லெனின் என்னை அறிமுகப்படுத்தினார். எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர் ஸைனேவீவ் என்பவர். லெனினுக்கு வலதுகரமாகத் திகழ்ந்தவரும். லெனினுக்கு அடுத்தபடி ருஷியாவுக்குத் தலைவராக வரக்கூடும் என்று கருதப்பட்டவர் அவர்தான். இரண்டொரு வார்த்தைகள் அவரிடம் பேசிவிட்டு. இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டு நான் வெளியேறினேன். லெனினுடன் என்னுடைய முதல் சந்திப்பு இவ்வாறு முடிந்தது.

கடவுள் அன்புடையவரா— ஆற்றலுடையவரா ?

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

'எல்லாம்வல்ல முழுமுதற்பொருளுக்கும்' நமக்கும் ஏதேனும் நேரடித் தொடர்பு உண்டா; நம்முடைய நடவடிக்கைகளுக்குத் தகுந்தாற்போல் பலாபலன்களை அளிக்கக்கூடிய வேறோர் உலகம் இருக்கிறதா, என்பன போன்ற பிரச்சினைகள், நம்மால் ஆராய்ச்சி செய்யப்படவேண்டியவைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை தத்துவத்தைப் பொறுத்துமட்டும் இருந்துவரும் ஒரு பெரும் பிரச்சினைகளாக இருக்கவில்லை; நமது அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளோடுப், பெரிதும் முடிபோடப்பட்டனவாகவும் இருந்து வருகின்றன. நம்மில் பெரும்பாலோரின் கவனமும், கவலையும் இந்தப்பிரச்சினைகளைச்சுற்றி, எப்பொழுதும் வட்டமிட்டவண்ணமிருக்கின்றன. நமது வாழ்க்கையோ மிகவும் குறுகியது; அதில் ஏற்படும் இன்ப நிலைகளோ மிகச் சொற்பம்; நாம் எதை விரும்புகிறோமோ அதை அடையும் நேரத்தில், இறப்பு மிக நெருக்கத்தில் வந்து நின்றுவிடுகிறது. ஒரு குறிப்பிட்ட முறையில் வாழ்ந்தால், அழிவில்லாப் பேரின்பத்தை அடையலாம் என்பது, நிரூபித்துக் காட்டப்படும் ஒன்றாக இருக்குமேயானால், பிறகு அந்த முறையில் வாழ, முட்டாளையும் பைத்தியக்காரனையும் தவிர, மற்றவர் யாரும் மறுக்கமாட்டார்கள். ஆகையினாலே, அண்டத்தைப் படைத்த படைப்பாளனின் தன்மை பற்றியும், படைப்பின் அமைப்புபற்றியும், மனிதனின் எதிர்கால வாழ்வு பற்றியும் நிலவிவரும் மதக்கொள்கையை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டியது, அவசியமாகிறது. ஆனால், நாம் இந்த ஆராய்ச்சியில் இறங்குவதற்கு முன்பாகக், கடவுள் கொள்கையையும் ஒழுக்கத்தையும் தனித்தனியாக வேறுபிரித்தே பார்க்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். இறைவனின் தன்மை எப்படியாக இருந்தபோதிலும், மறுபிறப்பு என்ற ஒன்று இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒருபெரும் ஒழுக்கநெறிகள் எந்தவிதத்திலும் மாறுபடா. கடவுள் என்பது முழுக்க முழுக்க ஒரு அறிவியல் பிரச்சினையாகும். கடவுள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவரை விளக்கிக் காட்ட முடிந்தாலும் முடியாவிட்டாலும், நமது கடமைகளும் பொறுப்புகளும் அப்படியேதான் இருக்கின்றன. மோட்சம்—நரகம் இருப்பதைக் குறித்து நமது ஆராய்ச்சிமுடிவுகள் மாறுபடலாம்; ஆனால் மக்களின் ஒழுக்கப் பண்புகளைப் பொறுத்து நமது ஆராய்ச்சி முடிவுகள் அவ்வளவாக ஒருபோதும் மாறுபடுவதில்லை.

கடவுளைப்பற்றிக் கொள்ளப்படும் பொதுவான கொள்கை இதுதான்: இந்த உலகமானது மாபெரும் ஒரு முழுமுதற்பொருளால் உண்டாக்கப்பட்டது; அவன் தன்னுடைய வடிவத்தை ஒத்தே மனிதனையும் உண்டாக்கினான்; எனவே அவனுடைய உள்ளமானது மனிதனுடைய உள்ளத்தோடு நெருங்கிய தொடர்பையும் தன்மையையும் கொண்டிருக்கிறது; நம்முடைய உள்ளமெலாம் அறைகுறையாகவும், ஆசைகள் நிரம்பியனவாகவும், பாபக்கறை படிந்தனவாகவும், அளவோடு கூடிய ஆற்றலுடையனவாகவும் இருக்கும் நிலையில், அவனுடைய உள்ளம் நிறைவு உடையதாகவும், அழகு வாய்ந்ததாகவும், ஆற்றல் நிறைந்ததாகவும், அன்பு வழிவதாகவும் இருக்கிறது; அவன் எல்லாம்வல்லவன், எப்பொழுதும் உள்ளவன்; அவன், தான் உண்டாக்கிய வழிகளில் நடப்பவர்களை, அன்புடன் நேசிக்கிறான், ஆனால் மாறுபட்டு நடப்பவர்களை நினைந்து அவன் வருத்தப்படுகிறான்; மக்களுக்கு ஒரு உயர்நிலை அளிப்பதற்காகவே அவர்களை உலகில் கொண்டுவந்து சேர்த்துள்ளான்;

பாபம் செய்துவிட்டு அதற்காக மனம் வருந்தியவர்களுக்கும், குற்றம் செய்ததால் மனம் உடைந்து அடக்கமாக இருப்பவர்களுக்கும் அவன் மன்னிப்பு அளிப்பான்; அதுமட்டுமல்லாமல், அவர்களை என்றும் அழியாப் பேரின்பத்தில் இருத்துவான்; கொடுமையானவர்களையும், அழுத்தமானவர்களையும், கல்நெஞ்சர்களையும், அவனுடைய அதிகாரத்தை மறுப்பவர்களையும்—எதிர்ப்பவர்களையும், அவன், அவனுடைய நீதிமுறையின்படி தண்டிப்பான; இப்படியாக அவன் பேரின்பப் பரிசு அளிப்பதும், தண்டனை கொடுப்பதும் ஒவ்வொரு உடலினுள்ளும் உறையும் உயிர் அல்லது 'ஆன்மா'வுக்கே ஆகும்! 'ஆன்மா' என்பது மதவாதிகளின் கருத்துப்படி, அறிவிலிருந்தும், உள்ளத்திலிருந்தும் வேறு பிரித்துக்காட்டக்கூடிய ஒன்றாகும். தெருவில் திரியும் சாதாரணப் பிராணிகளின் ஆன்மாவும், பெரிய தத்துவ அறிஞன் அல்லது புலவன் ஆகியோரின் ஆன்மாவும் படைப்பாளன் முன்னால் ஒரே தன்மையுடையனவாகும்; அவன் ஆட்களை மதிப்பவனல்லன்; ஆன்மாக்களையே மதிப்பவன்; அவற்றையும் அவைகளின் பாபங்களைக்கொண்டே மதிப்பிடுவான். ஆனால், அறியாமை நிரம்பிய ஆன்மாக்களின் பாபங்கள் அவனால் மன்னிக்கப்படும். மிக்க அறிவுடைய ஆன்மாக்களின் பாபங்கள், மிக்கக்கவலையோடு ஆய்ந்து பார்க்கப்பட்டுப், பின் நீதி வழங்கப்படும்!

நாம், இந்த விதமான கடவுள்கொள்கையை மிக நெருக்கமாக நின்று, ஆராய்ந்துபார்க்காத வரையிலும், அதன் முடிவுகளைக் கடைசிவரையில் நீட்டிப்பார்க்கமுயலாதவரையிலும், அது அறிவுக்கு ஒத்தவொரு கொள்கையாகவே படும். ஆனால், நாம் மேற்கூறியவாறு ஆராய்ச்சி செய்துபார்க்கத் தொடங்குவோமேயானால், அந்தக் கொள்கை அபத்தமாகச் சென்று முடிவதைக் காணலாம். அதை மிகவிரைவில் நிரூபித்துக்காட்டிவிடலாம்.

அறிவற்ற மூடர்களின் ஆன்மாக்கள், அவர்களின் பாபச்செயல்களுக்கு அவைகளே காரணமாகா வாகையால், அவை மோட்ச லோகம் சென்று சேரும்; ஆனால் கீதே, ரூஸோ போன்ற பேரறிவாளர்களின் ஆன்மாக்கள் நரகநெருப்புக்கு அஞ்சியே தீரவேண்டும். ஆகையினால் ஒருவன் கீதேயைப்போலவோ, அல்லது ரூஸோவைப் போலவோ பிறக்காமல், ஒரு அறிவற்ற மூடமாகப் பிறப்பது எவ்வளவோ சாலச்சிறந்தது என்று ஏற்படுகிறது! இது முழு அபத்தம் என்று கூறிடத் தேவையில்லை; தானே புலப்படும்!

'ஆன்மா என்றும் அழியாது; மறுமையில் பேரின்பம் உண்டு'-என்ற இந்தமதக்கோட்பாடு, இவ்வுலகில் துன்பச் சுழலில் உழன்றுகொண்டிருக்கும் அறியாமக்கள், தங்கள் அவதிகளினின்றும் தப்பித்துக்கொள்வதற்கான ஏற்ற வழியைக் கற்பிக்கும் ஓர் உபாயமாகும் என்று மதவாதிகள் நிலைநாட்டுகின்றனர். ஆனால் உண்மையில் பார்க்கப்போனால், அப்படி ஏதும் நிகழ்வதாகத் தெரியவில்லை. அது, துன்பத்திற்கு அடிப்படைக் காரணம் எது என்பதையும் விளக்கிக் காட்டவில்லை; துன்பம் ஏன் உலகில் இருக்கவேண்டும் என்பதற்கான சமாதானத்தையும் அது கூறவில்லை. ஏதும் அறியாத ஒரு குழந்தை, எல்லாம் வல்ல இறைவனால் உலகத்தில் தள்ளிவிடப்படுகிறது; அது யாருக்கும் எந்தவிதக் கெடுதியையும் செய்யவில்லை; அப்படியிருந்தும் அது மிகக் கொடுமையான முறையால், சித்ரவதைக்கு உள்ளாக்கப்படுகிறது; அது, கெட்ட ஒழுக்கங்களும், குற்றங்களும், நோய்களும் வந்து அண்டும்படி செய்யப்படுகிறது; சிலகாலம் வரையில் துன்பப்படும்படி விடப்படுகின்றது; இறுதியில் கொல்லப்படுகிறது! பிறகு எல்லையற்ற பேரின்பத்தில் அது இருத்தப்படுகிறது என்பதெல்லாம் சரி; ஆனால், ஏன் நேரடியாகவே பேரின்ப நிலைக்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடாது? ஒரு மனிதன், குழந்தை ஒன்றைக் கொண்டிருந்து, அவன் அதனை ஒரு காரணமுமில்லாமல் அடிக்க, ஏன் அப்படிக் குழந்தையை அடிக்கிறான் என்று கேட்டால், பின்னால் அதற்குரொட்டியும், ஒயினும் கொடுப்பதற்காக, இப்பொழுது அடிக்கிறான் என்று கூறுவது சரியான சமாதானமாகுமா?

இது படைப்பாளனின் பண்புகளைப்பற்றி ஆராயவேண்டிய நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இந்தநிலையில் எல்லோரையும் நினைவுபடுத்திக்கொள்ளும்படியாக நாம் கூறவது என்னவென்றால்: நாம் உண்மையான படைப்பாற்றலைப்பற்றி அல்ல இங்கே வர்ணிப்பது; படைப்பாளனைப்பற்றிப் பொதுவாக நிலவி வரும் கருத்தையே குறிப்பிடுகிறோம் எல்லாம் வல்ல முழுமுதற்பொருளுக்கு

'உள்ளம்' உண்டு என்று சொல்லப்படுகிறது. அதனை நாம் மறுக்கிறோம். மறுப்பதற்கான காரணங்கள், நல்ல அடிப்படையின்மீது எழுப்பப்பட்டனவாகும் என்பதை நிரூபிக்க, அந்தக் கற்பனை உள்ளத்தை அலசிக்காட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

முதலில், பண்பொழுக்கத்தின் அடிப்படையில் நின்று பார்த்தால், மக்கள்தம்மின் நல்வாழ்வுக்கு என்று அல்லாமல், அவர்களைப் படைப்பிக்கும் உரிமை கடவுளுக்கு இல்லை என்றே கூறலாம். இப்படிக்கூறுவது சிலருக்கு வியப்பாக இருக்கலாம்; கருத்து இவ்வளவு கடுமையானதாக இருக்கிறதே என்று எண்ணலாம்; அளவை மீறிய கடுமையானது என்றுகூடக் கருதலாம். அவர்கள் பிரான்ஸ் நாட்டில், பதினைன்காவது லூயிமன்னன் காலத்தில், "அரசர்கள் மக்களின் நன்மைக்காகத்தான் வாழ்கிறார்களேயல்லாமல், மக்கள் அரசர்களின் நன்மைக்காக வாழவில்லை" என்று கூறுவார்களேயானால், அப்பொழுது அவர்கள் கூற்றும், அளவுக்கு மீறிய கடுமையான கருத்து என்றுதான் கொள்ளப்பட்டிருக்கும். நாம் ஆண்டவனின் உரிமை பற்றிப் பேசுவது அதிசயமாகத் தோன்றக் கூடும்; ஆனால், யாராலும் அதனை மறுத்துக் கூறிவிட முடியாது என்பது மட்டும் உறுதி. ஏனென்றால், படைப்பாளன், நமது ஒழுக்க விதிகளுக்கெல்லாம் மேலாக வைத்து எண்ணப்படுகிற அளவுக்கு அவ்வளவு உயர்ந்த நிலையை உடையவன் என்றல்லவா கூறப்படுகிறது! அப்படிப்பட்டவன், உரிமையை அழித்து ஆதிக்கத்தை நிலைநாட்டுவது எப்படிச் சரியாகும்? உரிமையை ஆதிக்கம் அழிக்கக்கூடாது என்ற கொள்கை, சரியானது என்று ஒப்புக்கொள்ளப்பட்டதொன்று என்றால், மக்கள் நன்மையே பெறும்படி அவர்களைப் படைக்காமல், வாழ்க்கையில் தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகும்படி படைப்பதற்கு என்ன சமாதானம் சொல்லக்கூடும்?

ஆண்டவன் எல்லாம்வல்லவன் என்றும், அதேநிலையில் பேரன்பு கொண்டவன் என்றும் சொல்லப்படுகிறான். ஆனால் அவனின் ஒருபண்பு மற்றொரு பண்புக்கு முரண்பட்டு நிற்கிறது. அவன் வல்லமையில் நிறைவு பெற்றவன் என்றும், தூய்மையன்பால் நிறைவு பெற்றவன் என்றும் கூறப்படுகிறான். ஆனால் அவன் இரண்டு பண்புகளுக்கும் நிலைக்களனாய் வாழ முடியாது என்பதை அவனுடைய செயல்களிலிருந்து எளிதில் அறியலாம்.

ஒரு தந்தை தன் மகனிடம் நடந்துகொள்ளும் முறை பார்ப்பதற்குக் கொடுமையாகப் படும்; ஆனால் உண்மையில் அது கொடுமையின்பாற்பட்டதாக இருக்காது. தந்தை குழந்தையை அடிக்கிறான். ஏன் அடிக்கிறான் என்றால், அந்தக் குழந்தையின் நன்மைக்காகவே அப்படிச் செய்கிறான். அவன் எல்லாம் வல்லவன் அல்ல; ஆகையினாலே அவன் இரண்டு முறைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டியவனாக இருக்கிறான். மகனைக் கெட்டவனாகவே விட்டுவிடுவது நல்லதா அல்லது அவனை அடித்துத் திருத்துவது நல்லதா என்று சிந்தித்துப், பின்னதைச் செய்ய முற்படுகிறான். ஆனால் ஆண்டவனோ எனில் அவன் எல்லாம் வல்லவன்; ஒருவனை நல்லவனாகவோ, கெட்டவனாகவோ பிறப்பிக்கும் முழு உரிமையும் அவனைச்சார்ந்தது; எல்லோரையும் நல்லவர்களாகவே பிறப்பித்திருக்கலாம்; அப்படிக் கில்லாமல் கெட்டவர்களையும் பிறப்பிக்கிறான்; ஆகையினாலே அவன் கொடுமைப்படுத்துவதை ஒரு கல்வி கற்பிக்கும் முறையாகவோ, வளர்ச்சி ஊட்டும் வழியாகவோ தேர்ந்தெடுக்கிறான் என்றாகிறது; ஆகையினாலே அவன் கொடுமைபுரிவதை முதற்சலுகையாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்று ஆகிறது, இல்லாவிட்டால் அதனை அவன் தேர்ந்தெடுத்திருக்கமாட்டான்; ஆகையினாலே அவன் கொடுமையை விரும்புபவனாகிறான். இல்லாவிட்டால் அதற்கு முதற்சலுகை தந்திருக்கமாட்டான் என்றும் ஆகிறது; ஆகையினாலே அவன் கொடுமையாளன் என்பது உறுதிப்படுகிறது; ஆண்டவன் கொடுமையாளன் என்று ஆகுமேயானால், அது அபத்தம் அல்லவா!

பாபம், ஒன்று ஆண்டவனது விருப்பத்துக்கு மாறாக உலகத்திற்கு வந்திருக்கவேண்டும், அல்லது அவனுடைய அனுமதியின் பேரில் வந்திருக்கவேண்டும். பாபம் ஆண்டவன் விருப்பத்திற்கு மாறாகத்தான் வந்தது என்றால், அப்பொழுது ஆண்டவன் எல்லாம் வல்லவன் என்ற பெயரைப் பெறமுடியாது; இல்லை, அவன் அனுமதியின் பேரில்தான் வந்தது என்றால், அவன் அன்புடையவன் என்ற பெயரை ஏற்கமுடியாது. ஆண்டவன் அனுமதியின் பேரில், பாபம் வந்தது என்றால், அது அவ

னுடைய ஏஜண்டாக இருக்கவேண்டும்; அவன் பாபத்தைத் தேர்ந்தெடுக்கிறான் என்று ஆக வேண்டும்; அவன் பாபத்திடத்து விருப்பங் காட்டுகிறான் என்று ஏற்படவேண்டும்; அவனே பாபம் செய்தவனாகவும் ஆகவேண்டும்; கடவுள் இத்தன்மையாளன் என்றால், இதுவும் அபத்தமல்லவா!

நன்மை, தீமையை அடக்கி ஆளவேண்டும் என்றும், நன்மை வளரவேண்டும் என்றும், தீமை குறையவேண்டும் என்றும் விரும்பு கிறோம். ஆனால் ஆண்டவன் அன்பு உடைய வன் என்றால், ஏன் உலகில் தீமை இருக்க வேண்டும்? சுவைபடவும், நாடகபாணியிலும் அமைய, முதல் பாகத்தில் தீமையாளர்களைப் புகுத்தி, இரண்டாவது பாகத்தில் தீமைகளைக் காட்டி, மூன்றாவது பாகத்தில் தீமையை நன்மை வெல்லுவதுபோல் சித்தரித்திடும் நாவலைப் போன்றதா இவ்வுலகம்? பிறப்பிக்கப் பட்ட உயிர்களின் உணர்ச்சிகள் எப்படிப் பட்டனவாக இருக்கும் என்பதை ஆண்டவன் ஆராய்ந்து பார்த்ததாக, உறுதியாகத் தெரிய வில்லை. தீர்ப்பு வழங்கும் நாள் என்று, உள்ள படியே ஒரு நாள் இருக்குமேயானால், மனிதன் ஆண்டவன் முன்பாக குற்றவாளியாக நிற்க மாட்டான், ஆண்டவன்மீது குற்றஞ் சுமத்து பவனாகத்தானிருப்பான். ஆசையும் அவதியும் நிரம்பிய வாழ்வில் கிடந்து உழலும்படி, அவன் என்ன செயல் செய்தான்? ஆண்டவன் நம்மை யெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும்படி படைத் திருக்கலாம்; ஆனால் அவன் நம்மையெல்லாம் துன்பத்தில் தவிக்கும்படி செய்துள்ளான்! இதுதான் அன்பின் அறிகுறியா? ஆண்டவன் நம்மையெல்லாம் தூய்மையாகப் படைத்திருக் கலாம்; ஆனால் அவன் நம்மைப் பாபிகளாகப் படைத்துள்ளான்! இதுதான் பண்பொழுக்க நிறைவின் அறிகுறியா? மனிதன் கண்டுபிடித்த இந்தக் கடவுள் இருப்பதை, உள்ளபடியே நான் நம்புவதானால், நான் அவரைப்பார்த்துக் கேட்பேன், "ஓ, ஆண்டவனே! நீ, உன்னு டைய உலகில் வாழும்படி என்னைச் செய்ய லாம்; ஆனால் நான் உன்னைப் புகழும்படி நீ என்னைச் செய்ய[illegible]பாது! நீ என்னைச் சங்கிலி களால் பிணைத்துப[illegible]பாடலாம்; ஆனால் உன்னு டைய பெருமையைப் பேசிக்கொண்டிருக்கும் படி என்னைச் செய்யமுடியாது! நீ என்னை நரகத்தின் நெருப்புக்கு அனுப்பிவைக்கலாம்; ஆனால் நீ என்னுடைய மதிப்பைப் பெறமுடி யாது! நீ என்னைத் தண்டிக்கிறாய் என்றால், நீ உன்னையே தண்டித்துக் கொள்கிறாய் என்று பொருள்! நான் பாபங்களைச் செய்கிறேன் என்றால், அவைகள் உன்னால் உண்டாக்கிக் கொடுக்கப்பட்டவைகள்தாம்; அவை உன்னு டைய கொடுமையைக் குறிப்பதேயாகும்! நீ உண்டாக்கிய கடிகாரம் சரியாகப் போகவில்லை என்றால், அது யாருடைய குற்றம்? அதிலுள்ள சக்கரங்களையும், சுருள்கம்பிகளையும் கண்டிப் பது அறிவுடைமையாகுமா?" என்று. இயற்கை நிகழ்ச்சிகளைக் காணும்போது, ஆண் டவன் எல்லாம் வல்லவனாகவும், அதேபோழ்து அன்புடையவனாகவும் இருக்கிறான் என்பதை ஒப்புக்கொள்ள இடமேற்படுவதில்லை. இரண்டு தன்மைகளும் அவனுக்குப்பொருந்தி வரவில்லை!

★★

பூ! இவ்வளவுதானா!

ஏஜஸிலாயஸ் கிரேக்க நாட்டின் சிறந்த ஒரு படைத்தலைவன். குள்ள உரு வம்; ஒருகால் சிறிது முடம்; ஒன்றரைக்கண், என்றாலும் சிறந்த போர்வீரன். அவ னுக்கு வயது எண்பது ஆயிற்று; அப்பொழுதும் அவன் படைத்தலைவன்தான்.

எகிப்துக்கும் பாரசீகத்துக்கும் போர் மூண்டது. எகிப்து கிரேக்க நாட்டின் உதவியை நாடியது. கிரேக்க நாட்டுப் படை ஏஜஸிலாயஸ் தலைமையில் திரண் டெழுந்தது. அவன் எகிப்து நாட்டுக் கடற்கரையில் வந்திறங்கியிருந்தபோது, அவ னுக்கு மரியாதை செலுத்த எகிப்தின் அமைச்சர், அறிஞர், அதிகாரிகள், படைத் தலைவர் முதலானோர் சென்றனர்.

ஏஜஸிலாயஸ் ஆடம்பரம், தடபுடல் எதுவுமின்றி, சாதாரண போர்வீரர் உடையில், கடற்கரையை அடுத்த புல்வெளியில் உட்கார்ந்திருந்தான். அவன் உரு வம், வயது, தோற்றம் ஆகியவற்றைக் கண்ட பார்வையாளர்கள் திடுக்கிட்டு, மன மொடிந்து ஏமாற்றமடைந்தனர். "பூ!...இவ்வளவுதானா! மலையைக்கெல்லி எலியைப் பிடித்த பழங்கதைபோல் ஆகிவிட்டதே நமது செயல்" என்று மனம் நைந்து கூறினர். ஆனால் ஏஜஸிலாயஸ் 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்ற பழமொழியைத் தன் செயலால் அவர்களுக்குப் பின்னால் நினைவுபடுத்தினான்.

தொடர்கதை

இனியோவின் காதலன்

[இரா. செழியன்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

டாக்டர் சொன்னதை நம்பமுடியாமலிருந்ததால், நேரில் போய் மாசிலாமணி எப்படியிருக்கிருனென்பதைப் பார்த்துவரலாமென, சுந்தரமூர்த்தி வீட்டுக்கு நான் போனேன். நான் உள்ளே போனபொழுது, சுந்தரமூர்த்தி தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தார். நான் அவருடைய கையைக் குலுக்கி, என் வாழ்த்தைத் தெரிவித்தேன்.

"குடும்பத்தின்மீது படிந்திருந்த பெரிய இருள் நீங்கிற்று. இப்பொழுதுதான் மகிழ்ச்சியாக நடமாட முடிகிறது" என்று அவர் தெரிவித்தார்.

"பையன் எங்கே யிருக்கின்ருன்?" என்று கேட்டேன்.

"உள்ளே உட்கார்ந்திருந்தான். இருங்கள். கூப்பிடுகிறேன்!" என்று கொஞ்சதூரம்போய், "மாசிலாமணி! மாசிலாமணி!" என்று கூப்பிட்டார்.

உள்ளிருந்து மாசிலாமணி வந்தான். அப்பொழுது அவனைப் பார்த்தால், சிறிது நாட்களுக்குமுன் சித்தப்பிரமையுடன் இருந்தவன் போலத் தோன்றவில்லை. நன்ருகத்தான் இருந்தான். ஏதோ புதிதாகவீட்டுக்கு வந்தவன்போல், சுற்றிலும் முற்றிலும் பார்த்தவண்ணம் அவன் எங்கள் பக்கம் நெருங்கினுன். அவனுக்குச் சித்தப்பிரமை உண்டாவதற்குமுன் அவனை நான் பார்த்ததில்லை. இப்பொழுது, வெள்ளைச் சட்டையுடன், தலைமயிரை நன்ருக ஒதுக்கிக் கொண்டு அவன் நின்றபொழுது, பார்ப்பதற்கு நன்ருக இருந்தான். அவனுக்கு மூளைக் கோளாறு உண்டாகி, தனது நடையுடைகளையும் உள்ளத்தையும் யிழந்த யாரோ ஒரு போர் வீரனைப்போல உலவிக்கொண்டிருந்தான் என்பதை நினைப்பதற்கே பரிதாபத்தைத் தருவதாக இருந்தது.

என்னை மாசிலாமணிக்குச் சுந்தரமூர்த்தி அறிமுகம் செய்துவைத்தார். சிறிது நேரம் நான் கேட்ட கேள்விகளுக்கு அவன் பதில் சொல்லிக்கொண்டிருந்தான். எந்தக் கல்லூரி, என்ன வகுப்பு, பேராசிரியர் யார் இப்படிக் கேட்டேன். ஆனல் நாங்கள் பேசும்பொழுது, அவன் சித்தப்பிரமையுடன்இருந்ததைப்பற்றிச் சிறிதுகூட, குறிப்பு வரவில்லை. நானும் சுந்தரமூர்த்தியும் அதை வெகு முன்னறிவிப்புடன் ஒதுக்கிவிட்டே அவன் முன் பேசிக்கொண்டிருந்தோம். சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தபின், மாசிலாமணி தோட்டத்தின் பின்பக்கம் உலவச் சென்றுவிட்டான். நாங்களிருவர் மட்டும் தனித்திருந்து பேசிக்கொண்டிருந்தோம்.

"வருகிற ஞாயிற்றுக்கிழமை ஒரு பார்ட்டி இங்கே ஏற்பாடு செய்திருக்கிறேன்! நமது நண்பர்களெல்லாம், டாக்டர் உட்பட எல்லோரும் வருவார்கள்!" என்று சுந்தரமூர்த்திசொன்னர்.

"அவசியம் செய்யவேண்டியதுதான்" என்று நான் அதை ஆமோதித்தேன்.

"நீங்கள் மறந்துவிடாமல் அவசியம் வரவேண்டும். மேலும் உங்களுடன் அன்றைக்கு ஒரு பெண் வந்ததே, அவர்களையும், அவர்களுடைய தந்தையையுங் கூட, அழைத்துவர வேண்டும். நானும் அழைப்பு அனுப்புகிறேன்" என்று சொன்னர்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, டாக்டர் வந்தார். மாசிலாமணி குணமடைந்ததற்கு அவரைத்தான் மிகவும் பாராட்டவேண்டும். அவர் எவ்வளவு கஷ்டப்பட்டு, நடித்து, மருந்துகள் கொடுத்து, மாசிலாமணியைப் பழைய நிலைக்குக் கொண்டுவந்தார். ஆனல் டாக்டருக்கேகூட, எப்படித் திடீரென்று

ஒரு நாள் அவனுக்குச் சித்தப்பிரமை நீங்கியது என்று கூறமுடியவில்லை. அந்தப் பெண்ணைப் பார்த்ததும், அவனுக்கு ஏதோ மனக்கலக்கமோ, மனவதிர்ச்சியோ ஏற்பட்டு, பழைய நிலை வந்திருக்கலாமென்று கூறினர். ஆனாலும், நிச்சயமாக அவனுக்கு ஏற்பட்ட மாறுதலின் காரணத்தை யாராலும் கண்டுபிடிக்கமுடியாமலிருந்தது.

மாசிலாமணி

கடைசியாக எனக்கு நன்றாக ஞாபகத்திலிருப்பது, நான் நாடகமேடையில் நின்றுகொண்டிருந்ததுதான். முதலில் ஒத்திகையில் இருந்த கூச்சம், பாடம் ஒப்பிப்பதில் ஏற்பட்ட தடுமாற்றம் எல்லாம் அன்று நாடகத்தில் ஆண்டனி வேஷத்தைப் போட்டுக்கொண்டு மேடைமேல் அடிவைத்ததும் நீங்கிவிட்டன. நாடகம் பார்ப்பவர்களில் ஒருவராக இருந்து, நாடகத்தைப் பார்ப்பதைவிட, நாடகமாடுபவர்களில் ஒருவனாக இருந்து கீழே உட்கார்ந்திருப்பவர்களைப் பார்க்கும்பொழுது வேடிக்கையாகயிருந்தது. அன்று இரவு நாங்கள் நாடகம் நடத்திய ஹாலில் கூட்டம் நிறைந்து, எல்லோருடைய கண்களும் மேடையின்பக்கம் திரும்பியிருந்தது. கூட்டத்தின் முன் வரிசையில் என் அப்பா—அம்மா—என்னுடன் படிக்கும் முத்து முதலானோர் அமர்ந்திருப்பது தெரியும். முதல் சீனில் தோன்றி, என் பாகத்தை முடித்து உள் திரும்பியதுமே, நடிப்பு சரியாயிருக்கிறது என்ற தைரியம் எனக்கு வந்தது. அதற்குப்பின் எந்தக் கவலையுமில்லை, நாடகத்தில் நுழைந்தேன். கடைசியாக ஒரு கட்டத்தில்—ஆண்டனியும் அவனுடைய தளபதிகளும் யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, எதிரிகள் படைகூட்டி வருவதாக ஒரு வீரன் வந்து செய்தியறிவித்தான். அதன்மீது ஆண்டனிக்கு எழுகிற கோபப்பேச்சை நான் ஒப்பித்துக்கொண்டிருக்கும்பொழுது, எதிரிலிருந்த தளபதிகளில் ஒருவன் பயங்கர முகத்துடன் ஏதோ குமுறிக்கொண்டு என்னை நோக்கி ஓடிவருவதுபோல் தோன்றியது, பின்னாலிருந்து யாரோ பலமாக என் தலைமீது அடித்துவிட்டனர், வலி தாங்காமல் நான் மேடைமீது விழுந்துவிட்டேன்.

நான் கண்ணை விழித்துப் பார்த்தபொழுது, என்னைச் சுற்றிலும் அந்தத் தளபதிகளும், போர் வீரர்களும் சூழ்ந்து என்னுடைய மூர்ச்சையைத் தெளிவிக்க முயற்சிப்பது தெரிந்தது, அவர்களைப் பார்த்ததும்தான் நாடகமேடையில் இருக்கிறோமென்ற ஞாபகம் வந்தது. உடனே, நாடகத்தைத் தொடர்ந்து நடத்தலாமென்று நினைத்து, எழுந்து நின்றேன். சுற்றிலும் பார்த்தால்! என் கண்களை நம்பவே முடியவில்லை. சற்றுமுன் நாடகம் பார்க்க உட்கார்ந்திருந்த மக்களையெல்லாம் காணமுடியவில்லை. நாங்கள் நடமாடிக்கொண்டிருந்த நாடக மேடை, படுதா, விளக்கு, எல்லாம் மறைந்துவிட்டன. ஏதோவொரு தோட்டத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தேன். நாடக மேடையிலிருந்து தூக்கிவந்து, என்னை வெளியில் புல்தரையில் போட்டிருக்கிறார்களோவென்று நினைத்தேன். ஆனால் சுற்றிலும் பார்த்தால், மங்கிய வெளிச்சம் இன்னும் இருந்தது, பொழுது மறைந்து இரவு ஆரம்பிக்க இன்னும் சிறிது நேரமிருந்தது. ஆனால் நாங்கள் நாடகம் ஆரம்பிக்கும்பொழுதே இரவு மணி ஒன்பதுக்குமேல் இருக்கும். அதிலும் இரண்டுமணி நேரத்திற்குமேல் நாங்கள் கழித்து இருப்பதால், அப்பொழுது இரவு பதினொரு மணிக்குக் குறைவில்லாமல் இருக்க வேண்டும். ஆனால், இங்கே வெளியில் வந்து பார்த்தால் மணி ஆறுக்குமேலிருக்காது போலிருக்கிறது. நான் திகைத்து இருக்கும்பொழுது, என்னுடனிருந்த தளபதிகள்—அவர்களும் இன்னும் வேஷம் கலைக்காது இருந்தனர்—என்னைத் தாங்கி அழைத்துச் சென்றனர். ஒன்றும் புரியாத நிலையில் நான் அவர்களுடன் உள் சென்றேன். மறுபடியும் நாடகத்தைத் தொடர்ந்து நடத்துவதென்றாலும், எனக்குச் சில பகுதிகள் மறந்துவிட்டன. இருந்தாலும், பின்னாலிருந்து சொல்லிக்கொடுப்பவர் உதவியால் நாடகத்தை முடித்துவிடலாம் என்று தோன்றியது.

நாடக மேடையில் போடப்பட்டிருந்த பெரிய பலகைமீது உட்கார்ந்ததும், என்ன பேசவேண்டுமென்று நினைத்து, எழுந்து ஒரு பார்வை பார்த்தேன். என்ன ஆச்சரியம்! என் எதிரே இருக்கவேண்டிய நாடகம் பார்ப்பவர்களையோ, நாடகம் நடந்த கொட்டகையையோ காணோம். நான்கு புறத்திலும் சுற்றிப்பார்த்தேன்—எல்லாம் சுவர்களால் மறைக்கப்பட்டிருந்தன. திறந்த வெளிப்பக்கம் எங்கும் கிடையாது.

நான் திகைப்புடன் உட்கார்ந்திருக்கும் பொழுது "ஹெயில் ஆண்டனி!" என்று ஒருவன் கூவிக்கொண்டு, என் முன் வந்து நின்று வணங்கினான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை, நாடகம் இன்னும் நடக்கிறதா? கூடியிருந்தவர்களெல்லாம் எங்கு போனார்கள்? இப்பொழுது எங்கே இருக்கிறோம்? ஒருவருமேயில்லாமல் இங்கு நாடகம் எதற்காக நடக்கிறது? விடைகாண முடியாத கேள்விகள் என் மனதில் எழுந்தன. தலையில் அடிவிழுந்ததால், வலி இன்னும் இருந்தது. ஒருசமயம் அந்த அதிர்ச்சியில் எல்லாம் மாறித் தெரிகின்றனவோ என்று நினைத்துச் சிறிதுநேரம் தலையைத் தாழ்த்தி உட்கார்ந்திருந்தேன். அப்படியே உறங்கிப்போய்விட்டேன்.

எவ்வளவு நேரம் அயர்ந்து தூங்கினேன் என்று தெரியாது. விழித்ததும்—அப்பொழுது நன்றாக இருள் சூழ்ந்திருந்தது—தட்டுத் தடுமாறி எழுந்து, சுற்றிப் பார்த்தேன். தூங்கப் போவதற்குமுன் எங்கு யிருந்தேனோ அதே யிடத்தில்தான் இருந்தேன். சுற்றிலும் இருந்த அலங்காரங்களைப் பார்த்தேன். எல்லாம் ரோம் நாகரிகத்தை யொட்டியிருந்தன. எப்படியங்கு வந்தோம்? ரோம் நகரத்துக்கே சென்றுவிட்டோமா? இது தற்காலத்திய ரோம் நகரமாகவும் தெரியவில்லை, பண்டைக்காலத்திய ரோம் நகரமாக இருந்தது. என்னுடைய உடை, பக்கத்திலிருந்த வாள், வேல், தலைக்கவசம் எல்லாம் அந்தக்காலத்தைச் சேர்ந்தவை. எப்படி வந்தன என்று புரியவில்லை. திடீரென்று எனக்குப் பயம் வந்தது. ஒரு வேளை நாடகமேடையில் நடிக்கும்பொழுது அடிவிழுந்ததால் இறந்து விட்டேனோ? ரோம் நகர உடையில் இறந்து விட்டால், மேல் உலகத்துக்கு—அது கீழ் உலகமாயிருந்தாலும் இருக்கலாம், ஏதோ வேறொரு உலகத்துக்கு—வந்ததும், ரோமானியர்கள் வாழ்கின்ற இடத்துக்கு அனுப்பிவிட்டார்களா?

தலை சுற்றுவதுபோலிருந்தது. எந்தப்பக்கம் போனாலும் சுவர்தான் தலைமீது மோதியது. சூழ்ந்திருந்த இருளோ என் கேள்விகளுக்குப் பதில் தரமுடியாத நிலையிலிருந்தது. தலையைக் கையில் பிடித்தவண்ணம் செய்வது தெரியாமல், உணர்வும், உள்ளமும் மரத்த நிலையில் உட்கார்ந்திருந்தேன். தொடர்ச்சியாக எதையும் நினைத்துப்பார்க்க முடியவில்லை. இடையிடையே நாடகத்தில் நான் நடித்துக்கொண்டிருந்தது, எதிரே கல்லூரி மாணவர்கள் அமர்ந்து ஆரவாரம் செய்வது இவைகள்தாம் ஞாபகத்துக்கு வந்துபோயின. அதற்கப்புறம் என்ன நடந்தது? நான் எப்படி அங்கு வந்தேன்? ஒன்றும் தெரியவில்லை!

மறுபடியும் நான் கண்விழித்தபொழுது அறையில் நல்ல வெளிச்சமிருந்தது. ஓடிப் போய் மூடியிருந்த ஜன்னலைத் திறந்துபார்த்தேன். தோட்டம், எங்கள் பங்களாவின் பின்புறத் தோட்டம்! ஆக வேறு எங்கும் நான் போய்விடவில்லை. எங்களுடைய வீட்டிலேயே தான் இருக்கிறேன். ஆனால் இந்த உடையெல்லாம் எதற்காக இன்னும் கழற்றாமல் இருக்கிறேன். நான் உடனே கல்லூரிக்குப் போய் முதல் நாள் நடைபெற்ற நாடகம் என்னகதியாயிற்று என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும்! அதற்குள் தோட்டத்தில் இரண்டுமூன்று பேர்கள் பேசிக்கொள்வது தெரிந்தது.

"நேற்று இரவு எப்படி இருந்தது?"

"மாசிலாமணி நன்றாகத் தூங்கினான்!" இந்தக்குரல் என் அப்பாவினுடையது.

"டாக்டர்! நாடகத்தில் அடிபட்டு, மூன்று மாதமாக இப்படிச் சித்தப்பிரமையேற்பட்டு, ராஜபார்ட் வேஷத்திலேயே யிருக்கிறானே! என்றைக்குக் குணமாகி, அவன் நல்ல நிலைமைக்கு வருவான்?"

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. நாடகம் நடந்தது நேற்றல்ல, மூன்று மாதத்துக்கு முன்பு! இந்த நீண்டகாலம்? சித்தப்பிரமையுடன் இருந்திருக்கிறேன்! நன்றாகப் பைத்தியம்! ஒரு பைத்தியக்காரன்! நாடகத்தில் ஆண்டனி வேஷத்தில் நடித்தது மட்டுமல்ல, அந்த "ஆண்டனியாகவே" மூன்றுமாதமாக இருந்திருக்கிறேன்! இந்தப் 'பைத்தியக்காரனைப்' பார்த்துவர ஒரு டாக்டர் வந்திருக்கிறார்! நன்றாக இருக்கும்பொழுதே நாம் செய்வதில் பலவற்றைப் பைத்தியக்காரத்தனமானது என்று மற்றவர்கள் சொல்வதைக் கேட்கிறோம் அதிலும் உண்மையில் பைத்தியமாகவே ஆகிவிட்டால், கேட்கவே வேண்டியதில்லை! இந்த மூன்றுமாதங்களாக—எப்படி அவ்வளவு நாட்கள் ஆயின என்றே எனக்குத் தெரியவில்லை—நான் எவ்வாறு இருந்தேனோ, உன்னுள்ளத்

தில் என்னுருவில் உலவிக்கொண்டிருந்த "ஆண்டனி!" என்னென்ன வேடிக்கைகள் செய்து காட்டினுனே தெரியாது!

நான் திகைப்புடன் இவற்றைப்பற்றி யெண்ணிக்கொண்டிருக்கும்பொழுது, கதவு திறந்து, உள்ளே ரோம் உடையணிந்த மூன்று பேர் வந்தார்கள். "ஹெயில் ஆண்டனி!" என்று கூவிவிட்டு, சற்று எட்டிநின்றனர். மூவரையும் சற்று உற்றுநோக்கினேன். இரண்டாவது நின்றுகொண்டிருந்ததுதான் என் அப்பா! முதலாவது வந்தவர்—அவரது குரலிலிருந்து அவர்தான் டாக்டரென்று நிச்சயத்துக்கொண்டேன். மூன்ருவதாக வந்தவர் யாரென்று தெரியவில்லை. அவர்கள் ஏதேதோ பேச ஆரம்பித்துவிட்டனர்; ஆக்டேவியஸ் படையமைப்பு, எகிப்துநாட்டுக் கப்பல்கள், ஈனேபரஸ் லிபியா சென்றிருப்பது, ரோம் நகரில் செனெட் கூடியது, அங்கு சிசரோ பேசியது, ஏன் இவற்றையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள்—அதுவும் வகுப்பறையில் பையன்கள் பாடம் ஒப்பிப்பதைப்போல் ஒப்பிக்கிருர்கள் என்பது வேடிக்கையாக யிருந்தது. அதிலும் நாடகத்திலிருப்பவர்களைப்போல அவர்கள் உடைகளைப் போட்டுக்கொண்டிருந்தனர். அந்த அறையும்—முன்பு அங்கு புத்தகங்கள் வைக்கப்பட்டு அப்பா படித்துக்கொண்டிருக்கும் அறையாக இருந்தது—அது நாடக மேடையில் வரும் ஒரு பகுதியைப் போல, அலங்கரிக்கப்பட்டிருந்தது. நான் சுற்றிலும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது ஒருவர் முன்வந்து "நேற்று உங்களைப் பார்த்துவிட்டுச்சென்ற எகிப்து நாட்டு அரசிக்கு ஏதாவது செய்தியுண்டா?" என்று பணிவுடன் கேட்டான். உடனே; "நான் பைத்தியக்காரனல்ல! ஏன் இந்த வேஷமெல்லாம்?" என்று கூச்சல் போடலாமா என்று எனக்குத் தோன்றியது. என் அப்பா மாத்திரம் தனியாக இருந்திருந்தால் அப்படித்தான் செய்திருப்பேன்.

அவர்கள் வெளியில் போனதும், நான் தனியாக இருந்தபொழுது, கடந்த மூன்று மாதங்களாக என்னென்ன நடந்தது என்று ஞாபகப் படுத்திப் பார்க்க முயன்றேன். இரவு கண்ட கனவைப் பொழுதுவிடிந்ததும் திரும்பவும் ஞாபகப்படுத்த முடியாததுபோல் அப்பொழுது ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் கனவுலகில் கண்ட காட்சிகளில் சிலச்சில திரும்பவும் தோன்றி மறைவதைப்போல, துண்டுதுண்டாக சில சம்பவங்கள் மட்டும் நினைவுக்கு வந்தன. என்னைப் பார்த்ததும் ரோம் வீரர்கள் "ஹெயில் ஆண்டனி" என்று வணங்குவது, ஒருவன் ஓடிவந்து "ஆக்டேவியஸ் படை வருகிறது!" என்று கூவியதும் நான் வாளை உருவிக்கொண்டு நிற்பது, "அரசி கிளியோபாட்ரா நாளைக்கு வருவார்கள்" என்று ஒருவன் கூறுவது, அதற்குள் அடிமை வந்து என் கால்களில் ஏதோ தேய்ப்பது—எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற முறையில் சிலமட்டும் தோன்றி மறைந்தன. பின் ஆண்டனி—கிளியோபாட்ரா, என்ற நாடகப் பெயரிலிருந்து, "கிளியோபாட்ரா!" "கிளியோ!" "என் நைல்நதி நாகம்!" இவைகள் ஞாபகத்துக்கு வந்தன. அவைகளை அடிக்கடி நான் சொல்லியிருக்கிறேன்.

நைல் நதிக்கரை—ஏதோ ஒரு நதிக்கரை, அங்கே நான் நின்றுகொண்டிருந்தேன். நான் கையை யசைத்துக் கூப்பிட்டதும், கிளியோபாட்ரா ஒரு படகில் அமர்ந்து வருகிருள். நானும் அவளும் படகில் உலவிவருகிறேம். பின் அவள் தோட்டத்தில் உட்கார்ந்திருக்கிருள்—அவள் தோட்டத்துக்கு எப்படி வந்தாளென்று புரியவில்லை. என்னைப் பார்த்ததும் அவள் எழுந்து ஓடுகிருள். "கிளியோ! கிளியோ!" என்று நான் கூப்பிடுவதையும் கவனிக்காமல் திடீரென்று அவள் தடுக்கி கீழே விழுந்துவிடுகிருள். அவளைத் தூக்க நான் அருகில் போகிறேன். பக்கத்தில் போய் நின்றதும், அடிபட்டுக்கிடந்தவள் திடீரென்று மாயமாய் மறைந்துவிடுகிருள்! குழப்பமடைந்த நிலையில், இந்தக் காட்சிகள் தோன்றி மறைந்தன.

கிளியோபாட்ரா! அப்படி யாராவது வந்தார்களா? நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை, ஆனுல் சற்றுமுன் அவர்கள் என்னிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, "நேற்று உங்களைப் பார்த்துவிட்டுப்போன எகிப்து நாட்டு அரசிக்கு ஏதாவது செய்தியுண்டா?" என்று கேட்டார்களே! அப்படியானுல் ஒரு "ஏகிப்து நாட்டு அரசி" வந்துவிட்டுச் சென்ருளா?

என்னுடைய நினைவுகளை—எண்ணங்களை என்னுலேயே சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்னும் இரண்டொரு நாட்கள்

ஒழுக்கத்தின் எடுத்துக்காட்டா?

மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பது மதமே; மதமில்லாவிட்டால் மக்கள் ஒழுக்கங் கெடுவர், இழிநிலை அடைவர், துன்பம் எய்துவர், தொல்லைப்படுவர் என்றெல்லாம் கூறிடும் 'திருக்கூட்டத்தார்,' இதுநாட்களில் ஆங்காங்கு கிளம்பியுள்ளனர்.

மதச் சின்னங்கள் தரித்து, மதச்சடங்குகளைப் போற்றி, பாசுரம்பாடி, பக்திசெலுத்திப், பரந்தாமனைப் பாடினால், ஒழுக்கம் வந்துவிடும்; உயர்வு எய்திவிடுவோம் என்று உபதேசம்புரிகின்றனர் மத நம்பிக்கையாளர்கள். ஒழுக்கத்துக்கும் 'கடவுளுக்கும்'—ஒழுக்கத்துக்கும் பக்திக்கும் தொடர்பு இருந்திருந்தால், உலகம் இதுகாறும் எவ்வளவோ முன்னேறி இருந்திருக்கவேண்டும்! எல்லாம் வல்ல ஆண்டவனும், எதையும் செய்யக்கூடிய அவதார புருஷரும், நினைத்ததைச் செய்து காட்டிடும் ஆண்டவன் அனுப்பிய தூதவரும், கடவுள் தொண்டரும், உலோககுருக்களும், பாதிரிமார்களும், புரோகிதர்களும், மௌல்விகளும், உலோமாக்களும், நாயன்மாரும், ஆழ்வாராதிகளும் மத நம்பிக்கையாளர்பக்கம் இருந்தும், உலகில் விரும்பும் ஒழுக்கம், ஏற்படாமலிருப்பானேன்? இன்பம் விளையாமல் போவானேன்? 'ஆக்கவும் அழிக்கவும்' வல்ல ஆண்டவனும், அவனது அடியார்களும் தோன்றி மறைந்தும்கூட ஒழுக்கம் உயரவில்லை; உயர்நிலை வரவில்லை! ஏனோ? இப்படிக் கேட்பதற்காகச் சீறியெழுவோர் இருக்கிறார்களேயொழிய, சமாதானம் கூறித் தெளிவுண்டாக்குபவர் 'அடியவர் கூட்டத்தில்' யாரும் இல்லை!

பொதுமக்களிடத்தில்தான் போதிய ஒழுக்கமும், பண்பும் ஏற்படவில்லை என்றாலும்,

---

நிதானமாக இருந்தால், ஒருவித அமைதியடைந்ததும், பழைய நிலைக்குப் போய்விடலாம் என்று தோன்றியது. மேலும், நான் பைத்தியக்காரனென்ற நிலையில் எப்படி வேஷம் போட்டுக்கொண்டு வந்தார்கள், என்னென்ன பேசினார்கள் என்பதும் தெரியும். அந்த வேடிக்கையையும் பார்க்கலாம்!

அதற்குப் பின் இரண்டு மூன்று நாட்கள் நல்ல பொழுதுபோக்காகவே கழிந்தன. ஒரு தொடர் நாடகத்தைப் பார்ப்பதுபோலிருந்தது. அதில் நானும் நடித்தேன், ஆனால் நாடகமென்று அதைக் கண்டுகளித்தது நான் மட்டும்தான்! மற்றவர்கள் முன் கூட்டியே என்னென்ன பேசவேண்டுமென்பதுபற்றி யோசித்துக்கொண்டு உள்ளே வருவார்களென்று தெரிகிறது. பாடம் ஒப்பிப்பதுபோல், தங்களுடைய பேச்சை ஒப்பிப்பார்கள். ஏதாவது தடங்கல் ஏற்பட்டுவிட்டால், போதும்! ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு எப்படியாவது சமாளிக்க முயற்சிப்பார்கள்! அதிலும் நான் சிக்கலான கேள்விகள் அவர்கள் எதிர்பாராத வகையில் கேட்டுவிட்டால், அவர்களுக்குத் திகைப்பே வந்துவிடும்! அவர்களுடைய பார்வை "இந்தக்கேள்விக்குப் பதில் நாங்கள் யோசித்துக்கொண்டு வரவில்லை!" யென்பது போலிருக்கும். ஆனால் வழக்கமாக தொழில் முறையில் நாடகத்தில் நடிப்பவர்கள்கூட எடுத்துக்கொள்ளாத கவலையுடன், அவர்கள் தங்கள் பாகத்தை நடித்தனர்.

இருட்டில் அடைபட்டுக்கிடந்தவன், திடீரென்று வெளிச்சத்தின்முன் நிறுத்தப்பட்டால், கண்கூசித் திகைப்பதுபோல, குழம்பியிருந்த நிலையிலிருந்து வெளிவந்ததும் புதியதொரு குழப்பத்தில் நான் சிக்கிக்கொண்டேன். முன்பு நடந்தவைகளை—தற்பொழுது என்னைச் சூழ்ந்து நடப்பவைகளை புரிந்துகொள்ள, எனக்குச் சிறிதுநேரமும், அவகாசமும் தேவைப்பட்டது. அந்தச் சூழ்நிலையில், என்னைச் சூழ்ந்திருப்பவர்கள் எனக்காக நடித்தார்கள்; அவர்களுக்காக நான் நடிக்க ஆரம்பித்தேன்!

(தொடரும்)

அடியவர் திருக்கூட்டத்தைப் பொறுத்தமட்டிலுமாவது ஒழுக்கம் ஏற்படலாமல்லவா? மடாதிபதிகளையும், மதக்குருமார்களையும் ஒழுக்கத்தில் நிலைநிறுத்தும் அளவுக்காவது, மதம் வெற்றிபெற்றிருக்கிறதா என்றால், இல்லை என்ற அழுத்தமான விடையைத்தான், வரலாற்று நிகழ்ச்சிகள் சான்றுபகர்கின்றன.

சித்தம் அடக்கி, மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை வெறுத்து, பந்தம் பாசம்விட்டு, முற்றுந்துறந்து, அருள்நெறிகாட்ட, ஆண்டவன் அனுமதியின்பேரில் வந்த மத அதிபர்களிடத்தாவது ஒழுக்கம் நின்று நிலவியிருந்ததா, நிலவியிருக்க மதம் முழுக்க முழுக்க உதவி செய்ததா என்றால், இல்லை!

சைவமதம், தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் போன்ற மடங்களில் வாழ்ந்த மடாதிபதிகளிடமும், தம்பிரான்களிடமும் எந்த அளவுக்கு ஒழுக்கத்தையும், உயர்பண்பையும் நிலைநாட்டிவந்தது என்பதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்! 'சந்திரகாந்தா' என்ற பேசும்படமே அதனைப் போதிய அளவு சித்தரித்துக் காட்டும்!

கிருத்துவ மதம், இடைக்காலத்தில், போப்பாண்டவர்களிடமும், பாதிரிமார்களிடமும் எந்த அளவுக்கு ஒழுக்கத்தையும், உயர்ந்த பண்பையும் நிலைநாட்டிற்று என்பதை ஐரோப்பிய வரலாறு தெள்ளத் தெளிவாக்குகிறது! மதமே ஒழுக்கங் கற்பிக்கக்கூடியது; அது இல்லாவிட்டால் ஒழுக்கங் குன்றிப்போகும் என்று கூவுவோர்க்குக் காணிக்கையாக இருக்கட்டும் என்றுதான், வரலாற்றின் சிற்சிலபகுதிகள் இங்கே விரிக்கப்படுகின்றன.

பத்தாவது ஜான் (John X) என்பவர் ரோம் நகரில் குருபீடம் ஏறிய போப்பாண்டவர்களிலே ஒருவர். அவர் ராவென்னா என்ற இடத்தில் பாதிரியாராக இருந்தகாலத்தில், அடிக்கடி ரோம் நகரம் சென்று வருவது வழக்கம். ரோம் நகரின் சட்ட மன்ற உறுப்பினர் ஒருவரின் மனைவி தியோடோரா (Theodora) என்பவள், ஜானுக்கு நட்புடையவளானாள். தன்னுடைய காதலர் தன் அருகில் இருக்க வேண்டும் என்பதற்காக, ஜான், போப் ஆவதற்கான உதவிகளையெல்லாம் செய்து, போப் தேர்தலில் வெற்றியுறச் செய்தாள்.

மரோஷ்ஷியா (Marozzia) என்ற வேறோர் பெண், தன்னாலானதை யெல்லாம் செய்துப், பத்தாவது ஜானைப் பதவியிலிருந்து நீக்கி, அவரை சிறையிலடைத்தாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். ஒருவன் முன்னைய போப் ஒருவருக்குப் பிறந்தவன்; அவனை 'ஆத்மீகமகன்' (Spiritual Son) என்று அழைத்தனர். மற்றொருவன் அவளுடைய கணவனுக்குப் பிறந்தவன்; அவனை 'லௌகீக மகன்' (Secular Son) என்று அழைத்தனர். 'ஆத்மீக மகனை'ப் பெருமுயற்சி செய்து கி. பி. 931-ல் போப் பதவிக்கு உயர்த்தினாள். 'லௌகீக மகன்' அல்பெரிக் (Alberic) என்பான் நகராளும் பதவியைப் பெற்றான். 'ஆத்மீக மகன்' பதினைந்து வயதிலேயே போப் பதவியை ஏற்றான். அவன் கணக்கற்ற பெண்களைக் காதலித்தான் என்று 'ஹாம்ஸ்வொர்த் உலக வரலாறு' என்ற நூல் குறிப்பிடுகிறது. அவன் வேட்டையாடுவதிலும், விளையாட்டுப் பழகுவதிலும், குடித்து மகிழ்வதிலும் காலத்தைப் போக்கினான் என்று சொல்லப்பட்டுள்ளது.

அந்த நாட்களில் போப்பதவி பிரபுக்களுக்கு மட்டுமல்லாமல், அவர்கள் மனைவிமார்க்கும் விளையாட்டுப் பொருளாக அமைந்திருந்தது என்று அந்த 'உலக வரலாறு' செப்புகிறது.

சாண்டா மரியா டி பார்பா (Santa Maria Di Farga) என்ற இடத்தில் இருந்த பாதிரிமார்கள் மதக்குருவை விஷங்கொடுத்துக் கொன்றுவிட்டு, அவர்களுக்குள்ளே சண்டையிட்டுக்கொண்டு, மடாலயத்துக்குச் சொந்தமான பொருள்களையெல்லாம் பங்குபோட்டுக் கொண்டார்களாம். மேலும் பெண்களைத்தேடி திருமணம் புரிந்துகொண்டு, குடும்பத்தை வளர்த்துப், பிள்ளைகுட்டிகளைப் பெற்றுக் கொண்டு கோலாகல வாழ்வு வாழ்ந்தார்களாம். கடவுள் வழிபாட்டின்போது பயன்படுத்திய துணிகளைத் தம்முடைய பரத்தையர்க்குத் தந்தனராம்; கடவுளின் தங்க ஜெப பாத்திரங்களை அழித்துத், தோடுகளும், வளையல்களும் செய்தனராம்.

ரோம் நகரில் மீண்டும் ஜான் போப் பதவிக்கு வந்தார். ஆனால் ஜெர்மனி அரசன் ஆட்டோ (Otto)வுக்குப் பயந்து ஓடவேண்டி நேரிட்டது. பிறகு ஆறுவது லியோ (Leo VI) என்பவர் போப்பாக்கப்பட்டார். ரோம் மக்கள்

லியோவைத் துரத்திவிட்டு, மீண்டும் ஜானைக் கொண்டுவந்தனர். ஜான் காதல் முயற்சி ஒன்றில் ஈடுபட்டு, அதில் தம் உயிரையே இழக்கும்படி நேரிட்டது. பிறகு ஐந்தாவது பெனிடிக்ட் (Benedict V) என்பவர் போப்பாக்கப்பட்டார். அரசன் ஆட்டோ மீண்டும் இத்தாலிக்கு வந்து லியோவை மீண்டும் போப்பாக்கி, ஐந்தாவது பெனிடிக்டை இத்தாலியைவிட்டே ஓடும்படி செய்தான். மதம் வளர்த்த குருபீடத்தில் எவ்வளவு ஒழுங்கீனம்! எவ்வளவு குழப்பம், குளறுபடி!

இப்படிப்பட்ட போப்புகளைப்பற்றிப் பேசும்போது, அக்கால மக்கள், "ஆண்டவனின் கோயிலில், தானே ஆண்டவன்போல் பாவனை செய்துகொண்டு, கிருத்துவின் எதிரி உட்கார்ந்திருக்கிறான்" என்றும், "உலக அறிவும், ஆத்மார்த்த அறிவும் அற்ற, ஒழுக்கங்கெட்ட பயங்கர மனிதமிருகம்" என்றும் கூறினார்கள் என்று 'ஹாம்ஸ்வொர்த் உலக வரலாறு' குறிப்பிடுகிறது.

1012-ம் ஆண்டில் இரண்டு போப்புகள்' போட்டிபோட்டுக்கொண்டு, தாமேதான் போப் என்று தனித்தனியாகக் கூறிக்கொண்டு, குழப்ப நிலையை உண்டுபண்ணிக்கொண்டிருந்தார்களாம்.

ஒன்பதாவது பெனிடிக்ட் (Benedict IX) என்பவர் போப் பதவி ஏற்கும்போது பன்னிரண்டு வயதுதான். அந்தச் சிறுவயதிலேயே ஒழுக்கக்கேடான செயல்கள் அவரிடம் நிரம்பிக் கிடந்ததாம். ரோமன் மக்கள் அவரை நீக்கிவிட முயன்றபோது, இரண்டாவது கான்ராடு (Conrad II) என்ற ஜெர்மனி அரசன் முன்னின்று தடுத்து, அவருக்குப் பாதுகாப்பு அளித்தானாம். பல ஆண்டுகள் வரையில் அவரது கொடுங்கோன்மையும், ஒழுக்கக்கேடுகளும் தாங்கமுடியவில்லையாம். அவரது போக்கு கண்டு சகிக்காத மக்கள், இறுதியாக அவரைத் துரத்தி அடித்துவிட்டு, மூன்றாவது சில்வெஸ்டர் (Sylvester III) என்பவரைப் போப்பாகத் தேர்ந்தெடுத்தார்கள். பெனிடிக்ட் தனக்கு வேண்டியவர்கள் மூலம் பெருமுயற்சி செய்து மீண்டும் பதவிக்கு வந்து, இழிவான வாழ்வை நடத்திவந்தாராம். ஆறாவதுகிரிகரி (Gregory VI) காலத்தில், அவரையும் சேர்த்து மூன்று போப்புகள் பதவியிலிருந்தனர். யாரைப் போப் என்று கொள்வர் மக்கள்?

'அவ்வளவு அழகான நிலைமையை 'மதம்' பொறுத்துக்கொண்டிருந்தது; 'ஆண்டவன்' சகித்துக்கொண்டிருந்தார்!

கிளைமாதாகோவில்களிலும் மடாலயங்களிலும், சாமியார்களையும், மடாதிபதிகளையும் நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், யார் மிக்க தொகை கொடுக்கிறார்களோ அவர்களுக்கே அப்பதவிகள் வழங்கப்பட்டனவாம். "போப்பிலிருந்து வாயில் காப்போன் வரையில், மதச்சார்புடைய ஒவ்வொருவர்மீதும், 'ஆத்மார்த்த கொள்ளை'யின் கறை படிந்திருந்தது" என்று அந்த 'உலகவரலாறு' கூறுகிறது.

மூன்றாவது ஹென்றி(Henry III) ஜெர்மனி அரசனாகவந்தவுடன், அவன் மூன்று போப்புகளையும் தள்ளிவிட்டுப், புதியதொரு போப்பைத் தேர்ந்தெடுக்கும்படி, ரோம் நகர மக்களிடம் கூறினான். புதிய ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அவர்கள் அரசனிடமே விட, அரசன் இரண்டாவது கிளமண்ட் (Clement II) என்பவரைப் போப் ஆக்கினான். போப் அரசன் ஆக்கிவைத்த பொம்மையானான்.

ஏழாவது கிரிகரி (Gregory VII) என்ற போப ஆதிக்க வலிவோடு ஆண்டுவந்தார் எனினும், இறுதியில், நாடுகடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார். 'மதம்' போற்றிய ஆண்டவனின் பிரதிநிதிகளுக்கு இப்படிப்பட்ட கதியெல்லாம் ஏற்பட்டது!

1294-ம் ஆண்டில் போப்பாண்டவர் பதவி யாருக்குக் கொடுப்பது என்ற பிரச்சினை எழுந்தது. கட்டளைத் தம்பிரான்கள் போன்ற கார்டினல்களுக்குள் போட்டி ஏற்பட்டது. போட்டிகளின் காரணமாகச் சண்டை மூண்டது. இறுதியில் எல்லோரும்சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அல்புருஜ்ஜி என்ற மலையில் தவம் செய்துகொண்டிருந்த சாது ஒருவரை அழைத்துவந்து, அவரைப் போப்பாக்கிவிடுவது என்று தீர்மானித்தனர்.

விரும்பாத நிலையில், ஒரு சாதுவை வலுக்கட்டாயமாக அழைத்துவந்து, அவருக்கு ஐந்தாவது செலஸ்டின் (Clestine V) என்ற பட்டப்பெயரைச் சூட்டி, போப்பின் பீடத்தில் அமர்த்திவைத்தனர். அவரை ஒரு கோவேறுக் கழுதையில் வைத்துப், பல அரசர்கள் முன்னும்பின்னும் வர, நகருக்குள் அழைத்து வந்

தன்ராம். சடைபிடித்த தாடியும், கிழிந்த ஆடையும், காட்டு வாழ்க்கையும் கொண்டிருந்த அவரால் புதிதாகக் கிடைத்த போக போக்கியங்களையும், அதிகார ஆதிக்கங்களையும் அனுபவிக்க முடியவில்லை. பழையபடி காய், கனி, கிழங்குகளைத் தின்னும் காட்டு வாழ்க்கைக்குப் போகவேண்டுமென்று அவர் துடிதுடித்துக் கொண்டிருந்தார். நான்கு திங்கள்களுக்குப் பிறகு அவர் பதவியிலிருந்து விலக அனுமதிக்கப்பட்டாராம். அவருக்கு ஆலோசகராக இருந்த கயேடானோ என்பவர், மூன்ருவது போனிபேஸ் (Boni Face III) என்ற பட்டப் பெயர் சூட்டிக்கொண்டு போப் பீடம் ஏறினர். ஏறியவுடன் முந்திய போப்பை ஒரு இருட்டறையில் அடைத்துவைத்தார்; சில திங்கள்களுக்குப் பின், அவர் இறந்துபட்டபிறகுதான் வெளிப்படுத்தப்பட்டார். மதத்தின் பெயரால் எப்படிப்பட்ட ஒழுங்கு நிலைநாட்டப்படுகிறது!

ஐந்தாவது அலெக்ஸாண்டர் (Alexander V) போப் பதவியிலிருந்தபோது அவரையும் சேர்த்து மூன்று போப்புகள் பதவிப்போட்டியில் ஈடுபட்டிருந்தனராம்!

இருபத்திமூன்ருவது ஜான் (John XXIII) போப் ஆனபோது, பாபமன்னிப்புச் சீட்டுகளை விற்றதால் வந்த வருமானத்தைக் கொண்டு, ஒரு பெரிய போர்ப்படையையே திரட்டிப் பாதுகாப்புக்கு வைத்திருந்தாராம். அவர் அவருக்கு முந்திய போப்பைக் கொன்றுவிட்டார் என்றும் சொல்லப்படுகிறது. இறுதியில் அவரே ரோம் நகரைவிட்டு ஓடும்படியாகவும் ஆகிவிட்டதாம்.

ரோம் நகரில் அக்காலத்தில் வாழ்ந்த ஜெர்மானியர் ஒருவர், "ரோம் மடாலயத்தில் நடந்தேறிய ஒவ்வொரு செயலும் ஏமாற்றுதல், பேராசை, கர்வம்கொண்டதாகும்" என்றும் மற்ருெருவர் "சந்தையில் பன்றிகளை விற்கப்பட்டதுபோல், ரோம் மடாலயத்தில் மனிதர்கள் விற்கப்பட்டார்கள்" என்றும் குறிப்புகள் எழுதிவைத்ததாக அந்த 'உலக வரலாறு' பகர்கிறது.

ஒழுக்கத்திற்கு இருப்பிடமாகவும், உயர் பண்புகளுக்குக் கொள்கலமாகவும், பக்தர்களுக்கு எடுத்துக்காட்டாகவும், பாமரர்க்கு வழிகாட்டியாகவும், ஆண்டவனுக்கு அடியாராகவும், உலக பந்தம் பாசம், ஆசை ஆடம்பரம் ஆகியவைகளுக்கு எதிரியாகவும் கருதப்பட்டவர்கள் குருபீடங்களில் ஏறியோர்; இத்தகைய நற்குண நற்சீலங்கள், மற்ற மக்களைக் காட்டிலும் அவர்களிடம் மிகவாக எதிர்பார்க்கப்பட்டது, ஏனெனில், அவர்கள் ஆண்டவனின் பிரதிநிதிகளும், மதகர்த்தாக்களும் ஆவார்களல்லவா?

ஆருவது அலெக்ஸாண்டர் என்ற போப் கோலாகல வாழ்வில் மிகவும் மூழ்கிப்போயிருந்தாராம். அவர் 1492-ஆம் ஆண்டு போப் பட்டத்துக்கு வந்தார். அவருக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் 1480-ஆம் ஆண்டில் பிறந்தவள். அவளைமிஞ்சிய அழகுடையார் அந்த நாட்களில் வேறு யாரும் இல்லை. அவள் பாட்டு, நடனம் இவைகளில் மிக்க விருப்பமுடையவளாக இருந்ததோடல்லாமல், அக்கலைகளில் நல்ல தேர்ச்சியுற்ற 'கலைராணி'யாகவும் விளங்கினாள். அவள் பெயர் லுக்ரீஷியா போர்ஜியா Lucrezia Borgia) எனபது. அவளது நடனக்கலையை எப்பொழுதும் கண்டு மகிழவேண்டும் என்ற ஆர்வம், அவளுடைய தந்தை போப் அலெக்ஸாண்டருக்கு மட்டுமல்லாமல், மடாலயத்திலிருந்த பாதிரிமார்கள் அனைவர்க்கும் இருந்தது. அதற்காக மடாலயத்தின் சன்னிதான மண்டபமே, நடனக்கலையரங்கமாகப் பெரும்பொழுது மாற்றப்பட்டது. போப் குருபீடத்தில் அமர்ந்திருப்பார்; பாதிரிமார்களும், பக்தர்குழாமும் அவரைச் சுற்றியிருப்பார்கள்; பணியாளர்களால் விசிறிகள் விசிறப்படும்; பாதிரியார்களின் அன்புக்குரிய நாய் அருகே வந்து நிற்கும்; அப்பொழுது லுக்ரீஷியா போர்ஜியா அலங்காரமாக நடனமாடுவாள். இந்தக் காட்சியை சிறந்த ஓவியக்கலைஞரான ஹெச் கால்பாச் (H Kanlbach) என்பவர் ஓவியமாகத் தீட்டியுள்ளார். 'ஹாம்ஸ்வொர்த் உலக வரலாறு' என்ற நூல் இந்தப் படத்தை வெளியிட்டுள்ளது. போப் எவ்வளவு ஆர்வத்தோடும், அதிசயத்தோடும் தம் மகளின் நடனக்கலையைக் கண்டு அகமகிழ்கிருர் என்பது படத்திலிருந்து நன்கு தெளியப்படும். போப்பின் மகளான லுக்ரீஷியா மூன்று முறை மணம் செய்து கொண்டவள். அவள் முப்பத்தொன்பது ஆண்டுகள்தாம் உயிர்வாழ்ந்திருந்தாள். அதற்குள் ஆடவேண்டிய அளவுக்கு ஆடி அலுத்துவிட்டாள்!

கடவுள் பக்திக்கும் ஒழுக்கத்திற்கும், மத பக்திக்கும் ஒழுக்கத்திற்கும் நேரடித் தொடர்பு

மணம் விரும்பிய மங்கை

[இரா. நெடுஞ்செழியன்]

காலை மலர்கிறது; மக்களும் தங்கள் கண் மலர்ந்து நடமாடுகிறார்கள். இடையர் சேரியின் அமைதி விடியற்காலத்தே கெடுகிறது; எங்கணும் பேரிரைச்சல் வீறிட்டெழுகிறது. மாடுகளை மந்தை வெளிக்கு ஓட்டிச் செல்வோரும், கறவைகளைப் பால்கறக்கக் கொண்டுவருவோரும், ஆட்டுக்கிடையை ஓட்டிச்செல்வோரும், எருமைகளைக் குளிப்பாட்டி மீளுவோரும், மோர் விற்கச்செல்வோரும், பால் கறந்து வருவோரும் என்று இப்படியாகப் பலரும் தங்கள் தங்கள் கடமையை ஆற்ற முற்படுகின்றனர். அந்த வடிவழகியும் தன் கடமையின்மேல் கருத்துக்கொண்டு செம்பை எடுத்துக் குலுங்கி நடந்துசெல்கிறாள். அவள் நடை, உடை, அசைவு, ஆட்டத்தில் மயங்காதார் அச்சேரியில் யாரும் இல்லை. அவள் பால்கறக்கச் செல்கிறாள் என்றால், போவார் வருவார். சற்று நின்று அவளைப் பார்க்காமல் செல்வதில்லை. ஆண்களாக இருந்தால் ஆவலோடு பார்ப்பார்கள்; பெண்களாக இருந்தால் பொறாமையோடு பார்ப்பார்கள். அவள்தான் அந்த இடையர் சேரிக்கு அழகரசி!

பாலைக்கறந்து கலங்களை நிரப்புகிறாள். கன்றுகளையெல்லாம் பிடித்துத், தாம்புகளில் பிணைத்துத் தொழுவத்திலேயே நிறுத்துகிறாள். மாடுகளை அவிழ்த்து மந்தைக்கு விட்டுவிட்டுப், பாற்கலங்களை எடுத்துக்கொண்டு இல்லம் நுழைகிறாள். வேலைகளெல்லாம் மிக விரைவாக நடந்தேறுகின்றன; 'அவனை'க் காணவேண்டுமென்ற ஆவல் அவள் உள்ளத்தை ஆட்டிப் படைக்கின்றது. ஆடுமாடு மேய்க்கத் தோட்டத்திற்குச் செல்கிறேன் என்று தாயிடம் விரைந்து விடைகேட்கிறாள். தாய் தன் மகளின் அழகுக்கு அழகு ஊட்டும் வகையில், பூவேலைப்பாடும் கரையழகும் கொண்ட நீலப் புடவையைத் தந்து அதனை உடுத்திக்கொண்டு செல்லச் சொல்கிறாள். மகிழ்ச்சியோடு அதனை உடுத்திக்கொண்டு பாங்கர்க்கொடியும், முல்லைக் கொடியும் படர்ந்த தோட்டத்தை நோக்கி விரைகிறாள் அந்த எழிலரசி. அவளுக்கு முன்பே அங்கு ஆடுமாடு மேய்க்கும் இடைப் பெண்கள் கூடிக் கும்மாளம்போட்டு விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அத்தலைவியும் அவர்களோடு கலந்து விளையாட்டில் நாட்டம் செலுத்துகிறாள்.

தன்னை அன்றாடம் வந்துகாணும் தலைமகன் அன்றும் வருவான் என்ற ஆவலுணர்ச்சியோடு அடிக்கடி சுற்றுமுற்றும் பார்த்துக்கொள்கிறாள். தன்னை வந்து கண்டு அளவளாவி ஆடிப் பாடி மகிழ்ந்துவிட்டுச் செல்கிறானேயொழிய, மணம் முடிப்பதற்கான ஏற்பாடு எதையும் அவன் செய்யாமலிருப்பது அவளுக்கு ஒரு வகையில் வருத்தத்தைத் தருகிறது. தன்னுடைய வருத்தத்தை அப்படியே அவனிடம்

இருந்ததில்லை என்பதை எண்ணிலாச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. ஒருவன் கடவுள் பக்தி உடையவனாக இருந்தாலும், அற்றவனாக இருந்தாலும், ஒருவன் மதத்தொடர்பு கொண்டிருப்பவனாக இருந்தாலும், தொடர்பு அற்றவனாக வாழ்ந்தாலும், பகுத்தறிந்து நடக்கும் தன்மையினாலும், பாடு அறிந்து ஒழுகும் பண்பினாலுமேதான் ஒழுக்கமும், உயர்பண்பும் நிலைக்கின்றன என்பதுமட்டும் தெளிவாகும்!

வெளியிட்டுக் கூறிவிடவும் அவளுக்கு மனம் வரவில்லை; நாணம் அவளைப் பின்னுக்கு இழுத்துவிடுகிறது. ஆனால் எப்படியேனும் தன்னுடைய கருத்தை அவனுக்கு உணர்த்தி விடவேண்டும் என்பது அவளது ஆவல். இன்று சற்றுக் கடுமையாகவே பேசிப்பார்ப்போம் என்ற எண்ணத்துடன், அவன் வரும் வழிப் பக்கம் விழியை வைத்துப் பார்க்கிறாள்.

தோட்டத்தின் ஒரு மூலையில் வேறு சில பெண்களோடு சேர்ந்துகொண்டு மணல்வீடு கட்டி மகிழ்வதிலே ஈடுபட்டிருக்கிறாள். தலைவன் அவள் அறியாவண்ணம், பின்புறமாய் வந்து நிற்கிறான். ஆடவன் ஒருவன் வந்து நிற்பதைக் கண்டவுடன், பிற பெண்களெல்லாம் நாணப்பட்டுக்கொண்டு எழுந்து ஓடுகிறார்கள். தலைவி, அவர்கள் ஏன் வெடுக்கென்று எழுந்து ஓடுகிறார்கள் என்பது தெரியாமல் விழிக்கிறாள். பின்புறம் திரும்பிப் பார்க்கிறாள். தன் உள்ளத்தில் பதியவைத்திருந்த ஓவியம் உருவெடுத்து, உயிரோடு வந்து நிற்பதைக் காணுகிறாள். குருந்தம்பூவாற் செய்த மாலையைக் கழுத்திலே அழகாக அணிந்துகொண்டு, மணங்கமழ, மகிழ்ச்சியோடு அவன் நிற்கிறான். அவனோடு அவ்வளவு பேச்சு கொடுக்கவேண்டாம், சிறிது பிகு செய்துபார்ப்போம் என்ற எண்ணத்தோடு, ஏதும் பேசாமல், மணல்வீடு கட்டுவதிலே மீண்டும் கவனம் செலுத்துகிறாள்.

தலைவியின் போக்கு ஒரு மாதிரியாக இருப்பதைக் கண்ட தலைவன், அவளுக்கு எப்படியேனும் மகிழ்ச்சி பிறக்கச் செய்து, பேசவைக்க எண்ணுகிறான்.

"இங்கேயுள்ள பெண்கள் எல்லோரையும் பார்க்கும்போது, நீ எவ்வளவு அழகுடையவள் தெரியுமா? நகைகளால் உனக்கு அழகு ஏற்படுகிறதா அல்லது உன்னால் நகைகளுக்கு அழகு ஏற்படுகிறதா என்று பார்த்தால், உன்னால்தான் நகைகளுக்கு அழகு என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்!" என்று தலைவன் புகழ்ச்சிச் சொற்களை வீசிப்பார்க்கிறான்.

தலைவி அப்புறம் இப்புறம் திரும்பாமல் வீடு கட்டுவதிலேயே முனைந்திருக்கிறாள்.

"ஏடீ! நீ நாணிக் கோணும் மடப்பத்திலேயும்கூட தனி அழகுதான் காணப்படுகிறது!" என்று கூறுகிறான்.

தலைவி அதற்கும் வாய்திறந்தபாடில்லை.

"உனக்கு உதவியாக நானும் அந்த வீட்டைக் கட்டவா?" என்று கேட்டுக்கொண்டு, அவள் அருகே நெருங்குகிறான்.

உடனே தலைவி எழுந்து நின்று "ஏடா! உனக்கு வெட்கமில்லை? என்னை மணந்து கொண்டு ஒரு வீட்டை அமைக்க உனக்குத் தான் சிறிதும் திறமையில்லை!....என்னுடைய சுற்றத்தார் கட்டிய வீட்டிலே நான் இருக்க, அதுவே போதும் என்று இருப்பவன் நீ! இந்த உலகியலில் நீ கற்றுக்கொண்டது ஏதேனும் உண்டா என்றால், உறுதியாக ஒன்றும் இல்லை என்பேன்!" என்று இழித்தும் பழித்தும் கூறுகிறாள்.

"பெண்ணே! நீ எவ்வளவு அழகாக, நிறைந்த நகைகளை அணிந்திருக்கிறாய், தெரியுமா? உன் தலையிலே நீ வைத்திருக்கும் மாலை அவிழ்ந்து கிடப்பதைப் பார்! அதனை நான் அழகுபெற, உன்னுடைய மணம் வீசும் கூந்தலிலே சொருகவா?" என்று நயந்து கேட்கிறான்.

உடனே அவள், சினமும் கேலியும் கலந்த குரலில், "ஏடா! நீயோ என்னை மணந்து கொண்டு, இடைவிடாமல் மாலை சூட்டி மகிழும் தன்மையை அறிந்தவன் அல்லை! என்னுடைய சுற்றத்தார்கள் கட்டிக்கொண்டுவந்து, என் கூந்தலிலே சூட்டினால், அந்தப் பூவே போதுமானது, நாம் தேடிக்கொண்டுவரவேண்டிய அவசியமில்லை என்று கருதுபவன் நீ! எவ்வளவு பேதைத் தன்மையுடையவன் நீ என்பதை உறுதிப்படுத்த இதுவே போதுமானதாகுமே!" என்று கேலிமொழி பகர்கிறாள்.

தலைவி சுடச்சுடச் சொல்லும் சொற்களுக்கு என்ன விடையிறுப்பது என்று தெரியாமல், தலைவன் திகைக்கிறான். என்றாலும் திகைப்பை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், பேச்சை வேறுபக்கம் திருப்பலாம் என்று எண்ணிக் கொண்டு, "பெண்ணே! வியக்கத்தக்க முறையில் உன் மார்பிலேயும், தோளிலேயும் தொய்யில் குழம்பால் ஓவியம் எழுதட்டுமா?" என்று பணிவோடு, அது அவளுக்கு விருப்பம் அளிக்கும் ஒரு செயல் என்று கருதிக்கொண்டு கேட்கிறான்.

அதுகேட்ட தலைவி "ஏடா! என்னைத் திருமணம் செய்துகொண்டு, அச்சப்படாமல்,

முழு உரிமையோடு, யாவரும் அறிய, வெளிப் படையாகவே தொய்யில் எழுதும் தன்மையை நீயோ பெறவில்லை! எப்பொழுதும் என்னுடைய சுற்றத்தார் எழுதுவதையே நான் எதிர் பார்த்திருக்கவேண்டும் போலிருக்கிறது! எவ்வளவு நாட்களுக்குத்தான் இந்த நிலையைப் பொறுத்துக்கொண்டிருப்பது? நீயோ என்னிடம் அன்புள்ளவன் போலத்தான் காட்டிக் கொள்கிறாய்; ஆனால் உண்மையில் என்னைத் திருமணஞ் செய்துகொள்ள முன்வராமல் அச்சப்பட்டுக்கொண்டு, பெரிதும் மனமயக்க முடையவனாகவே காணப்படுகிறாய்! எனவே மனமயக்கத்தை விட்டு, மணம்முடிக்கும் உள்ளத்தோடு இனி என்னிடம் வருவாயாக!" என்று சற்றுக்கண்டிப்பாகவே கூறிவிடுகிறாள்.

தலைவன், தலைவியது அன்பைப் பெறவும், ஆறுதல் மொழி கேட்கவும் எவ்வளவோ முயலுகிறான். தலைவி ஒவ்வொன்றுக்கும் தக்க முறையில் மறுத்துக்கூறி, இனிக் களவொழுக்கத்தை நீட்டிக்கத் தான் விரும்பவில்லை என்ற எண்ணத்தைக் குறிப்பால் துணிந்து வெளியிட்டுவிடுகிறாள். மணம் செய்துகொள்வதற்கான முயற்சி ஏதும் செய்யாமல், களவொழுக்கத்திலேயே காலத்தை நீட்டி, இன்பகரமாகப் பொழுதைப் போக்கவேண்டும் என்று கருதிக் கொண்டிருந்த தலைவனுக்குத், தலைவியின் போக்கு மிக்க அதிர்ச்சியைத் தருகிறது. தலைவியோடு ஆடிப்பாடிக் கூடிப்பேசி மகிழ்ந்திருக்க வாய்ப்பு கிடைக்கப்பெறாமல், மனவருத்தத்தோடு, தலைவன் வீடுதிரும்புகிறான். தலைவனை உணரவைத்துவிட்டோம் என்ற உள்ளக்களிப்போடு தலைவியும் இல்லம் ஏகுகிறாள்.

இல்லம் சேர்ந்தவுடன் தன் தோழியைக் காணுகிறாள். தோழியிடம் அன்றைய நிகழ்ச்சிகளையெல்லாம் சொல்லிவிடவேண்டும்போல் அவளுக்குத் தோன்றுகிறது. காலையில் தான் பால்கறக்கக் கிளம்பியதிலிருந்து, தலைவன் மனவதிர்ச்சியோடு வீடுதிரும்பியவரையிலும் நடந்தேறிய நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்று விடாமல் தோழியிடம் கூறுகிறாள். தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி முன்கூட்டியே அறிவாளாகையால், திருமணம் செய்து கொள்ள, தலைவி எவ்வளவு மனத்துடிப்புடையவளாக இருக்கிறாள் என்பதை அறிந்துகொள்கிறாள். தலைவி தன் அன்றைய கதையைச் சொல்லி முடித்ததோடு நின்றுவிடாமல், மேற்கொண்டு நடக்கவேண்டியவைகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறும் தோழியை வேண்டுகிறாள்.

"தோழி! நீதான், அவனிடம் போய், ஆயர் பெண்களை மணந்துகொள்வோர் செய்யவேண்டிய முறைகளையெல்லாம் எடுத்துச்சொல்லி, மணப்பதற்கான ஏற்பாடுகளை விரைவாகச் செய்யச் சொல்லவேண்டும்! என்னுடைய தாயும் தந்தையும், நான் கொண்டிருக்கும் களவொழுக்கத்தை அறியும்படி முறைப்படி அறிவிக்கவேண்டிய பொறுப்பும் உன்னுடையது தான்! நீ இந்த உதவியைச் செய்வாய் ஆயின் என்னுடைய நோயையும் நீ போக்கினவள் ஆவாய்; அவனுடைய நோயையும் போக்கினவள் ஆவாய்! இதனை உன்னுடைய குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்" என்று தலைவி தன் நெஞ்சினைத் திறந்துவைக்கிறாள்.

தோழியும் தன் கடமையை ஆற்ற முற்படுகிறாள்.

ஃ ஃ ஃ

இது சோழன் நல்லுத்திரன் இயற்றிய முல்லைக்கலியினுள்ள 11-ஆம் செய்யுளாகும். இடையர் சேரியில் இடையன் இடைச்சியர் இடையே முகிழ்த்தெழும் காதலோவியத்தின் காட்சி ஒன்றினை, ஆசிரியர், அழகுபட, இச் செய்யுளின் வாயிலாகக் காட்டுகிறார். பண்டைக்கால காதல் வாழ்வு எவ்வளவு சீரும் சிறப்புமாகப் போற்றப்பட்டு வந்தது என்பதற்கு இத்தகைய செய்யுள்கள் சீரிய எடுத்துக் காட்டுகளாகும்.

ஃ ஃ ஃ

தீம்பால் கறந்த கலம்மாற்றிக் கன்றெல்லாம்
தாம்பில் பிணைத்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்அசைஇப் பாங்கரும்
முல்லையும் தாய பாட்டங்கால் தோழிநம்
புல்லினத்(து) ஆய்ர் மகளிரோ(டு) எல்லாம்
ஒருங்கு விளையாட அவ்வழி வந்த

குருந்தம்பூம் கண்ணிப் பொதுவன்மற்(று) என்னை
முற்றிழை ஏஎர் மடநல்லாய் நீஆடும்
சிற்றில் புனைகோ சிறி(து) என்றான் எல்லாநீ
பெற்றேம்யாம் என்று பிறர்செய்த இல்இருப்பாய்
கற்ற(து) இலைமன்ற காண்என்றேன் முற்றிழாய்
தாதுசூழ் கூந்தல் தகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்(கு) என்றான் எல்லாநீ
ஏதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரி(து) என்றேன் மாதராய்
ஐய பிதிர்ந்த சுணங்(கு)அணி மென்முலைமேல்
தொய்யில் எழுதுகோ மற்(று)என்றான் யாம்பிறர்
செய்புற நோக்கி இருத்துமோ நீபெரிது
மையலைமாதோ விடுகஎன்றேன் தையலாய்
சொல்லிய வாறெல்லாம் மாறுமா றியான்பெயர்ப்ப
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான் அவனைநீ
ஆயர் மகளிர் இயல்(பு) உரைத்(து) எந்தையும்
யாயும் அறிய உரைத்தீயின் யான்உற்ற
நோயும் களைகுவை மன்.

—[முல்லைக்கலி—11]

[மனைநிறீஇ - மனையில் நிறுத்தி ; யாய் - தாய் ; பூங்கரை நீலம்-பூப்போட்ட கரையமைந்த நீலப் புடவை ; புடைதாழ - பக்கத்தில் சரிய ; மெய் அசைஇ - மெய்யை அசைத்து ; பாட்டங்கால் - தோட்டக் கால் ; புல்லினம் - ஆட்டினம் ; பொதுவன் - இடையன் ; ஏஎர் – அழகினையுடைய ; தைஇய - தடவி ; கோதை - மாலை ; எல்லா - எடா ; ஏதிலார் - அயலார், சுற்றத்தார் ; நனி – மிக்க ; தொய்யில் – எழுதுதல்—ஒருவிதக் குழம்புகொண்டு உடலில் ஓவியமாகத் தீட்டுதல் ; மையலை -- மயக்கத்தை உடையாய் ; தையலாய் - பெண்ணே ; அல்லாந்தான்போல - அச்சமுற்றவன்போல ; ஆயர் - இடையர் ; களைகுவை - போக்குவாய்.]

★★

கன்றின் வயிற்றில் கடிகாரம்

அமெரிக்காவில் அயோவா பகுதியில் ஒரு சிற்றூரில் ஒரு குடியானவன், தன்னுடைய கோட்டை வேலியில் மாட்டி வைத்துவிட்டு, வேலை செய்துகொண்டிருந்தான். கன்றுக்குட்டி ஒன்று அந்தக் கோட்டுப்பையைத் தின்ன ஆரம்பித்தது. துணியோடு, கோட்டுப் பைக்குள் இருந்த கடிகாரமும் கன்றின் வயிற்றுக்குள் சென்றுவிட்டது. அந்தக் கடிகாரம், குடலில், சுவாசப்பைக்கு அருகில் தங்கிவிட்டது. சுவாசப்பை விரிந்து சுருங்கும்போதெல்லாம், கடிகாரத்தின் சாவியும் சிறிது சிறிதாகச் சுழன்றுகொண்டே இருந்தது. கன்று பெரிய மாடாகி, ஏழாண்டு காலத்திற்குப் பிறகு, ஒரு கசாப்புக்கடைக்காரன், அதனைத் தசைக்காக வெட்டினான். அதன் குடலில் கடிகாரம் ஒன்று இருக்கக் கண்டான். கடிகாரம் நான்கு நிமிடங்கள் மெதுவாக அப்போதும் ஓடிக்கொண்டேயிருந்தது.

"கண்டுபிடித்துவிட்டேன், கண்டுபிடித்துவிட்டேன்"

கிரேக்கப் பேரறிஞரான ஆர்கிமிடீஸ், (கி. மு. 287-212) சிரக்யூஸ் நகரைத் தம் வாழுமிடமாகக்கொண்டு வாழ்ந்துவந்தார். அப்பொழுது சிரக்யூஸ் நகரை ஹீரோ என்ற மன்னன் ஆண்டுவந்தான். ஆர்கிமிடீஸ் மன்னனுக்கு நெருங்கிய நண்பராகவும், உதவியாளராகவும் இருந்துவந்தார்.

அரசன் தட்டான் ஒருவனிடம், தனக்குத் தங்கமுடி ஒன்று செய்துவரக் கட்டளையிட்டான். தட்டான் முடிசெய்துகொண்டுவந்து கொடுத்தான். தட்டான் முடியை முழுவதும் தங்கத்திலேயே செய்திருப்பானா அல்லது வெள்ளியையும் சிறிது கலந்திருப்பானா என்ற ஐயம் அரசனுக்கு ஏற்பட்டது. இந்த ஐயப்பாட்டை, முடியை அழிக்காமல் அப்படியே வைத்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பது மன்னன் ஆவல். இதுபற்றி ஆராய்ந்து கூறுமாறு, அறிவியல் அறிஞர் ஆர்கிமிடீஸிடம் அரசன் கேட்டுக்கொண்டான். ஆர்கிமிடீஸ் அதன் உண்மையை அறிந்துகொள்ள எவ்வளவோ வழிகளில் முயன்றுபார்த்தார் ; அவருக்கு விடை கிடைக்கவில்லை.

ஒருநாள் குளிப்பதற்காக அவர் தண்ணீர்த் தொட்டியின் அருகில் சென்றார். தொட்டியில் தண்ணீர் விளிம்பு முட்டி நின்றது தொட்டியில் இறங்குவதற்காகக் காலை மெல்ல விட்டார். தொட்டியின் உள்ளே இறங்க இறங்க தண்ணீர் வெளியே வருவதையும் காலின் கனம் குறைந்துவிடுவதையும் கண்டார். உடன் அதுபற்றிய சிந்தனையில் ஆழ்ந்தார். தண்ணீருக்குள் அமுக்கும் பொருளின் பருமனுக்கும், அதனால் வெளியே தள்ளப்படும் தண்ணீரின் எடைக்கும் கட்டாயம் தொடர்பு இருக்கவேண்டும் என்று தோன்றிற்று. உடனே மகிழ்ச்சிப் பெருக்கால், அந்தக் குளித்த தோற்றத்தோடு, "நான் கண்டுபிடித்துவிட்டேன்! நான் கண்டுபிடித்துவிட்டேன்!" என்று தெரு நெடுகக் குதித்துக்கொண்டு, அரசனை நோக்கி ஓடினாராம்.

முடியில் எவ்வளவு தங்கம், எவ்வளவு வெள்ளி கலந்திருந்தன என்பதைக் கண்டுபிடித்துவிடலாம் என்பதே அவருக்கு ஏற்பட்ட துணிவு! அவ்வாறே கண்டு பிடித்தும் கூறினார்!

அவருடைய இந்தக் கண்டுபிடிப்பு அறிவியல் துறையில் முக்கியமான ஒன்றாகும்!

"மன்றம்" விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் மன்றம் இதழுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

சேங்கற்பட்டு
காரைக்கால்
விருதுநகர்
கோவில்பட்டி
சங்கரன்கோவில்
சீர்காழி
அம்பாசமுத்திரம்
ஜோலார்ப்பேட்டை
கோபிச்செட்டிப்பாளையம்
திருவள்ளூர்
ஏரல்
அம்மையப்பன்
கும்பகோணம்

மற்றும் விற்பனையாளர் இல்லாத ஊர்களிலும் விற்பனையாளர் தேவை.

விபரங்களுக்கு :

நிர்வாகி,
'மன்றம்'
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

நீதிபெற நிதிதாரீர் !

தூத்துக்குடியிலும் — கல்லக்குடியிலும்

ஆணவ ஆச்சாரியாரின் அரசாங்கத்தால்

குற்றங்கள் சுமத்தப்பட்டுக் குற்றக்கூண்டிலே

நிறுத்தப்பட்டிருக்கும் கழகத் தோழர்களை மீட்கக்,

கழகத்தின்மீது வீசப்பட்ட மாசினைப் போக்க,

நிதி தாரீர் !

அறிஞர் அண்ணாவின் வேண்டுகோளுக்கிணங்க

ரூ. 20000-ஐ மீறும் அளவுக்குத்தாரீர் !

இரண்டு வழக்குகளையும் ஏற்றுநடத்தும் தி. மு. க. தலைமை

நிலையத்திற்கு வலிவையும் வளத்தையும் தாரீர் !

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

அ. பொன்னம்பலனார், நிதிப்பொறுப்பாளர்,

"அறிவகம்", இராயபுரம், சென்னை.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.